
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 20 வியாழக்கிழமை (06.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 314



பருத்தித்துறை முனைப் பகுதியில் நடந்த அஞ்சலி நிகழ்வின்போது.

(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

## பன்னிரு வேங்கைகளின் 18ஆவது நினைவு தினம் தமிழர் தாயகம் எங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

கரவெட்டி,ஒக்.6

இலங்கை - இந்திய அரசுகளின் கூட்டுச் சதியினால் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 18ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் நேற்று உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன.

**பிரதான நிகழ்வு**

பிரதான நிகழ்வு வல்வை தீருவில் பன்னிருவர் நினைவுத்தூபியருகில் இடம்பெற்றது. மாவீரன் கப்டன் பிரசன்னாவின் தந்தை மு.தங்கவேல் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. கடற்புலிகளின் துணைப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையைத் தொடர்ந்து மாலை 5 மணி 5 நிமிடமளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஈகச்சுடரை கரும்புலி கப்டன் சிதம்பரத்தின் சகோதரன் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரை மாவீரர் சதாவின் தந்தை எஸ்.முத்துச்சாமி, மாவீரர்களான மேஜர் கில்மன், வீரவேங்கை அனார்க்கலி ஆகியோரின் தாயார் திருமதி எஸ்.சாம்பசிவம் ஆகியோர் ஏற்றினர். தேசியக் கொடியை மாவீரர்களான மேஜர் ஜேம்ஸ், கப்டன் சுந்தரி, கப்டன் வாசுகி ஆகியோரின் தந்தையான க. உருத்திராபதி ஏற்றினார்.

தொடர்ந்து லெப். கேணல்களான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் திருவுருவப் படங்களுக்கு அவர்களின் பெற்றோர், சகோதரர், உறவினர்களால் மலர்மாலை அணிவித்து தீபங்கள் ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் கடற்புலிகளின் துணைப் படையினரும் பொதுமக்களும் மலரஞ்சலி செலுத்தனர்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் ம.செபஸ்ரியாம்பிள்ளை, வைத்திய கலாநிதி க.மயிலேறும்பெருமாள், சிதம்பராக் கல்லூரி மாணவன் எஸ்.செந்தமிழ்ச்செல்வன், வடமராட்சி வடக்கு க.தொ.கூ.ச.ச. செயலாளர் க.சூரியகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

**பருத்தித்துறையில்**

பருத்தித்துறை முனைப்பகுதி விளையாட்டரங்கிலும் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. (18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் பிரதான கட்சிகள் ரணில் பக்கம் சாய்வு

## இ.தொ.காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் இரண்டின் முடிவும் நேற்று அறிவிப்பு

கொழும்பு,ஒக்ரோபர்6

**சிங்கள - பௌத்த மேலாண்மைப் போக்குடைய தென்னிலங்கைக் கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் பின்னணியில்,சிறுபான்மை இனத்தவர்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதான கட்சிகள், எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே. கட்சி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க பக்கம் சாய்ந்திருக்கின்றன.**

**மலையகத் தமிழர்களின் பிரதான கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், முஸ்லிம்களின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் தமது முடிவை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தன.**

தமிழ் பேசும் மக்களின் ஏனைய கட்சிகளான மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகியனவும் ரணிலையே ஆதரிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் முக்கிய அரசியல் இயக்கமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த இரண்டு வேட்பாளர்களிலும் எவரையும் ஆதரிக்கும் முடிவையும் எடுக்காது எனத் தெரிகின்றது.

ஆனால், உதிரிக் கட்சிகளான ஈ.பி.டி.பி., புளொட், ஆனந்தசங்கரி அணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகியவையும், முஸ்லிம்கள் தரப்பில் 'நுஆ' போன்ற ஒரு சில அமைப்புகளும் பிரதமர் மஹிந்தவை ஆதரிக்கின்றன.

எனினும், ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. போன்ற பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்குடைய கட்சிகளும், பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் பிரதமர் மஹிந்தவையே முழு அளவில் ஆதரிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

பேரினவாதப் போக்குடைய கட்சிகள் ஒரு (18ஆம் பக்கம் பார்க்க)

## ரணில், மஹிந்த பாதுகாப்பும் இரட்டிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் அதிகபட்ச பாதுகாப்பை வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இரு பிரதான வேட்பாளர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு, தேர்தல் (18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலையில் இன்றும், நாளையும் பட்டமளிப்பு

யாழ். பல்கலைக்கழக 24ஆவது பட்டமளிப்பு விழா இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரிய பட்டங்களை வழங்குவார்.

தினத்திற்கு 5 அமர்வுகளாக இருதினங்களும் மொத்தம் 10 அமர்வுகளில் பட்டங்கள் (18ஆம் பக்கம் பார்க்க)

**வேட்பு மனுத் தாக்கல் செய்ததும்**

## ரணில், மஹிந்த நாளை உடனே தலதா மாளிகைக்கு!

கொழும்பு, ஒக்.6

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை நாளை தாக்கல்செய்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவருமே கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் நேற்று இரு தரப்பிலும் தனித்தனியே மேற்கொள்ளப்பட்டன. தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மகாநாயக்க தேரர்களை (18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கொழும்பு திரும்பியவுடன் இ.தொ.கா. அமைச்சர்கள் ராஜினாமா!

கொழும்பு, ஒக்.6

தற்போது ஆளும் கட்சியின் பக்கத்தில் இருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது.

தற்போது, வெளிநாட்டில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பியதும் அரசில் அங்கம்வகிக்கும் இ.தொ.காவின் அமைச்சர்கள் தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகிவிடுவர் என்றும்-

ஜனாதிபதி நாடு திரும்பும் முன்பே அப்பதவிகளில் இருந்து விலகுமாறு அரசு தரப்பினால் கோரப்பட்டால் உடனடியாகப் பதவி (18ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமயவுடன் இ.தொ.கா. இரகசிய ஒப்பந்தம்

கொழும்பு, ஒக்.6

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டமை குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அச்சம் தெரிவிக்கின்றது. அதே இ.தொ.காதான் சில அரசியல் காரணங்களுக்காக ஜாதிக ஹெல உறுமயவுடன் இரகசிய ஒப்பந்தமொன்றையும் செய்துகொண்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தை நாம் விரைவில் அம்பலப்படுத்துவோம். எதிர்பார்த்துக் காத்திருங்கள். (18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் வெற்றியைப் பாதிக்காதவகையில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு!

### அதன் அடிப்படையிலேயே ரணிலுடன் இணக்கம் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஒக்.6

"தமிழர்களின் நியாயமான போராட்டத்துக்குக் கிடைக்கும் வெற்றியைப் பாதிக்காத வகையில் முஸ்லிம்களின் பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. இத்தேர்தலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது பற்றி வடக்கு - கிழக்கு முஸ்லிம்கள், புத்திஜீவிகள் மற்றும் சமயப் பெரியார்கள் ஆகியோருடன் பலதடவைகள் கலந்தாலோசித்த பின் ரணிலை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை எடுத்துள்ளோம்"

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், எம்.பியுமான ரவூப் ஹக்கீம் நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் முடிவை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் உள்ள அக்கட்சியின் தலைமைக் காரியாலயமான தாருஸ்ஸலாமில் நடைபெற்றது. (18ஆம் பக்கம் பார்க்க)



குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரு மாவீரர்களின் 18ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நேற்று இடம்பெற்றது. இதில் மாவீரர் மூவரின் தந்தை எஸ்.உருத்திராபதி தேசியக் கொடியையும், மாவீரரின் தாயார் திருமதி எஸ்.சாம்பசிவம், மாவீரரின் தந்தை எஸ்.முத்து சாமி ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றுவதையம், பொதுமக்கள் மலர் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- சுந்தரலிங்கம்)*



தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 மாவீரர்களின் நினைவுதினம் நேற்று பருத்தித்துறை முனைப் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.
இதில் மாவீரர்கள் மேஜர் தவச்செல்வி, லெப்.நிவேத்திரா ஆகியோரின் தந்தை தவராசா ஈகைச்சுடரையும் மாவீரர்கள் பழனி, நஜீவ், பதுமன் ஆகியோரின் தந்தை ர.சந்தியாபிள்ளை தேசியக்கொடி ஏற்றுவதையும், கடற்புலிகளின் துணைப்படைப்பிரிவினர் அணிவகுப்பு மரியாதையைச் செலுத்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- கரவெட்டிச் செய்தியாளர் சி.சுந்தரலிங்கம்)*

# கலாசாரத்தைச் சீர்குலைப்போருக்கு எல்லாளன் படையினர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.6

கலாசாரத்தைச் சீர்குலைப்போருக்கு எச்சரிக்கை விடுத்து 'கலாசார சீர்திருத்தப் பேரவை எல்லாளன்படை ஆளுகைப் பகுதி, யாழ். மாவட்டம்' என்ற பெயரில் எச்சரிக்கை சுவரொட்டி நேற்று யாழ். குடாநாட்டில் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்தது.

அதில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

எம் இனிய தமிழீழ மக்களே! உங்களுக்கு ஓர் பகிரங்க எச்சரிக்கை அறிவித்தலை அறிவிக்க விரும்புகின்றோம்.

✱ தம் உயிரை துச்சமென நினைத்து போராடி வரும் போராளிகளும், மண்ணுக்காய் உயிர் நீத்த மாவீரர்களும் மதிக்கப்படவேண்டியவர்கள். அவ்வாறு அவர்களை நீங்கள் மதிக்காது விட்டாலும் அவர்களின் தியாகங்களை விற்கும் தேச விரோதக் கும்பலுக்குத் துணை போவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அதற்கான தண்டனை நிறைவேற்றப்படும்.

✱ பாலியல் தொடர்புகளிலும், பாலியல் வல்லுறவிலும், அங்க சேஷ்டைகளிலும், பெண்களுடன் பகிடிவிடுவதும் முற்றாக ஒழிக்கவேண்டும்.

✱ மதுபோதையில் பொது இடங்களில் கூடி அரட்டையடிப்பதும், கோஷ்டிமோதலில் ஈடுபடுவதும், மற்றவர்களுடன் தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்பது சண்டையிடுவது முற்றாக ஒழிக்கவேண்டும்.

✱ பொது இடங்களில், வீடுகளில், கடைகளில், சந்திகளில் கூடிநின்று அநாவசிய வீண்வம்பு வதந்திகளைப் பரப்புதல், வயது வித்தியாசமின்றி பாலியல் சம்பந்தமான கதைகளைக் கதைத்தல் மற்றும் குடும்பங்களில் குழப்பங்களை உண்டுபண்ணும் வகையில் கதைத்தல் எ னை முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

✱ புனித இடங்களாகிய கோயில், மாவீரர் தூபிகள் என்பனவற்றிற்கு அருகில் இருந்து மது அருந்துதல், மதுபோதையில் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தல், சூதாட்டம் (கடதாசி, தாயவிளையாட் ), வீண்வம்பு அரட்டையடித்தல் என்பவை உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

✱ எமது நாட்டு இளைஞர்களே எமது நாட்டின் முதுகெலும்புகள். அவ் ாகிய நீங்கள் அநாவசியமாக பொது இடங்களில் கூடிநின்று உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்காதீர்கள். மேலும், உங்களுக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்க விரும்புகின்றோம். என்னவெனில், பொது இடங்களில் உங்கள் கல்வி மற்றும் சமூக முன்னேற்றம் சம்பந்தமாக மட்டுமே கூடிநிற்க அனுமதிக்கப்படுவீர் அது தவிர பொது இடங்களில் கடைகள், மதகுகள், சந்திகள் போன்ற இடங்களில் கூடிநிற்பதை முற்றாக நிறுத்தவேண்டும்.

✱ கல்விகற்கும் சிறுவர்களே, இளைஞர்களே குறிப்பாக 20 வயதிற்குட்பட்டவர்கள் அநாவசியமாக இரவு நேரங்களில் கூடிநிற்பதை முற்றாக நிறுத்தவேண்டும்.

✱ எம் இனிய மக்களே! இவ்வாறான தேச விரோத செயல்களில் ஈடுபடுவோரை எமக்கு இனம்காட்டித் தாருங்கள்.

✱ விஷமிகளின் செயற்பாட்டை ஒழித்து அவர்களிடமிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப உதவுங்கள்.

✱ புல்லுருவிகளை முற்றாக ஒழிக்க தமிழ் மக்களே ஒன்றுதிரளுங்கள்.

**கலாசார சீர்திருத்தப் பேரவை,**
**எல்லாளன் படை,**
**ஆளுகைப் பகுதி, யாழ். மாவட்டம்.**

# கிளிநொச்சியில் சிறப்புற நடைபெற்ற தமிழீழ தேசிய கௌரவிப்பு விழா

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவாக 2005ஆம் ஆண்டு விளையாட்டுக்கான தமிழீழத் தேசிய கௌரவிப்பு விழா நேற்று கிளிநொச்சியில் உள்ள தூயவன் அரசறிவியற் கல்லூரியில் நடைபெற்றது.

தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் 2005ஆம் ஆண்டில் விளையாட்டுத்துறையில் சாதனை புரிந்த இளையோருக்கும், அவர்களின் பயிற்றுநர்களுக்கும் கௌரவிப்பும் தேசிய விருதும் வழங்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இந்தக் கௌரவிப்பையும் தேசிய விருதுகளையும் வழங்கிக் கௌரவித்தார்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த முகமட் காறீஸ், கூட்டு மெய்வல்லுநர் நிகழ்வுகளின் சாதனையாளர்கள் ஆர்.ரதீசன், ரீ.நிசாந்தினி ஆகியோரும் இவர்களின் பயிற்றுநரான விஜயநீதன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சகாயரட்ணராஜா நிறைஞ்சன், இவரது பயிற்றுநரான எம்.முகுந்தன்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சாதனையாளர் எம்.பிரதீப்குமார் இவரது பயிற்றுநர் றொகான் இராஜசிங்கம், உயரம் பாய்தல் சாதனையாளர் கமலமோகன் அவரின் பயிற்றுநர் செ.ரமணன் -

உதைபந்தாட்டச் சாதனையாளர்களான மன்னார் புனித சவேரியார் கல்லூரியின் பதின்மூன்று வயதுப் பிரிவு வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்றுநர் தா.ஜேக்கப் ஆகியோரே இவ்வாறு தமிழீழத் தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சாதனையாளர்களாவர்.

உதைபந்தாட்டச் சிறப்புச் செயற்பாட்டிற்காக மன்னார் புனித சவேரியார் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரால் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தமிழீழ விளையாட்டுத்துறை - இளையோர் செயற்பாட்டு நிறுவனம் என்பன இந்தத் தேசிய விருது வழங்கும் நிகழ்வுகளுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தனதுரையில்:-

இரத்தம் சிந்தி கட்டியெழுப்பிய எமது தேசிய விடுதலையின் எழுச்சி எங்கள் குழந்தைகளின் மகிழ்ச்சியான எதிர்காலத்தையே

(18ஆம் பக்கம் பார்க்க)

# ரமழான் நோன்பு இன்று ஆரம்பம்

உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கப்பட்டிருக்கின்றது (அதனால்) நீங்கள் (உள்ள சக்தி பெற்று) பயபக்தியுடையவர்களாகலாம். (அல்குர்ஆன்:2:183)

எமது நாளாந்த வாழ்வில் நற்பண்புகளை வளர்த்து, ஆன்மாக்களைத் தூய்மைப்படுத்தி, திடவுறுதி, மனவலிமை, மனக்கட்டுப்பாடு, தன்னம்பிக்கை போன்ற அருங்குணங்களை வளர்த்து தீமைகளின்பால் செல்லவிடாமல் ஏழைகளின் துன்ப, துயரங்களையும், அறிந்து எங்களை நாங்கள் பக்குவப்படுத்தி சுவர்க்கப் பாதையிலே நடைபோட வைக்க வந்திருக்கிறது புனிதம் பொருந்திய "ரமழான்" (நோன்பு)

'இந்தமாதம் ஓர் அருள் பொழியும் மாதம், இம்மாதத்தில், பசிகிடந்து நீங்கள் நோற்கக் கூடிய நோன்பிற்கு நானே கூலியும் தருகின்றேன்' என்றசெய்தியை வல்லவன் அல்லாஹ் எட த கூறுகிறான். நபிதோழரான ஹஸரத் அபுஉமாமா (றழி)அவர்கள் அறி விக்கிறார்கள் 'நான் (ஸல்)அவர்களிடம் சென்று அல்லாஹ்விடத்தில் எனக்கு நற்கூலியைப் பெற்றுத் தரும் ஒரு காரியத்தை ஏவுங்கள் எனக் கேட்டபோது நீ நோன்பு நோற்றுக் கொள், ஏனெனில் அதற்கு நிகராக எதுவுமில்லை' எனக்கூறினார்கள். (ஆதாரம்! அஹ்மத்) இதனை எம் நெஞ்சினில் நிறுத்தி, எம்மிடம் வசந்தத்தின் செய்தியை, றமழான் வடிவில் கொண்டு வந்திருக்கும், நோன்பினை நோற்று இம்மாதத்தில் அதிகமானதான தருமங்களைச் செய்து இந்நாட்டினதும் இந்நாட்டு, மக்களினதும், சுபீட்சத்திற்கும், சுதந்திரவாழ்விற்கும் வழியமைக்கப்பட்டு, நாட்டின் நிலையான, சமாதானத்திற்குமாக, வல்ல இறைவனைப் பிரார்த்தித்து அருள் பொறுவோமாக.

- **மௌலவீ எஸ்.எம்.ஸஹீல்,**




குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவாக 2005ஆம் ஆண்டு விளையாட்டுக்கான தமிழீழத் தேசிய கௌரவிப்பு விழாவின்போது....

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தேசிய மட்டத்தில் ஐக்கியம்; பிரதேச மட்டத்தில் பிரிவினை

வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீண்டும் இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கக்கோரும் சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரான வண. கொட்டபொல அமர கீர்த்தி தேரர் கடந்த செவ்வாயன்று முயன்றார். எனினும், அந்த விவகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியால் மட்டுமே கையாளப்படவேண்டிய விடயம் எனக் குறிப்பிட்டு, நாடாளுமன்றத்தில் சட்டப் பிரேரணை கொண்டு வரும் முயற்சிக்குத் தடைபோட்டுவிட்டார் சபாநாயகர்.

1987ஆம் ஆண்டு ஜூலையில் செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழான கடப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்கும் வர்த்தமானி அறிவித்தலை 1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா விடுத்தார்.

இந்த இணைப்பை உறுதிப்படுத்துவது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று கிழக்கில் நடத்தப்பட்டு, இந்த விவகாரம் குறித்து இறுதிமுடிவு எடுக்கப்படும்வரை ஒருவருட காலத்துக்கான தற்காலிக இணைப்பாகவே அது அப்போது செய்யப்பட்டது. எனினும், பதினேழு ஆண்டுகள் கழிந்தும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படாத நிலையில் அந்த இணைப்பு நிரந்தரமாகிவிட்டது.

இலங்கை அரசுத் தலைமை - கொழும்பு நிர்வாகம் - வடக்கையும் கிழக்கையும் தனது நிர்வாக ரீதியிலான நோக்கங்களின் அடிப்படையில் இரண்டு பிரிவுகளாகவும், இரு மாகாணங்களாகவும் கருதலாம். ஆனால், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை வடக்கும், கிழக்கும் இரண்டு வெவ்வேறு பிரதேசங்கள் அல்ல. அவை ஐக்கியப்பட்ட தமிழர் தாயகத்தின் ஒரே மாநிலம்தான், தமிழரின் பிரிக்க முடியாத பூர்வீகத் தாயகம் இது.

தமிழர் தாயகத்தை முற்றாகக் கபளீகரம் பண்ணி, தனது ஆளுகைக்குட்படுத்தி, தமிழரின் பூர்வீகக் குடிப் பிரதேசத்தை அடிமைப்படுத்தியிருக்கும் தென்னிலங்கைப் பேரினவாதம், தமிழருக்கு அவர்களின் நியாயமான உரிமையான சுயாட்சியைக் கொடுக்க மறுத்து, 'ஐக்கிய இலங்கை', 'ஒற்றையாட்சி' என்றெல்லாம் தேசிய மட்டத்தில் முழங்குகின்றது. ஆனால், அதேசமயம் அது தமிழர் தாயகமான வடக்கையும் கிழக்கையும் துண்டாடுவதற்காகப் பிரதேச மட்டத்தில் பிரிவினையை வலியுறுத்தி வாதாடுகின்றது.

தமிழரின் பூர்வீகத் தாயகத்தைத் துண்டாட வேண்டும், வடக்கையும் கிழக்கையும் பிரிக்கவேண்டும் என்றெல்லாம் தமிழரின் நலனுக்கு விரோதமாகக் குரல் எழுப்பும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகள், இப்போது ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னால் அணிதிரண்டுள்ளனர். சிறுபான்மையினருக்கு எதிரான பேரினவாதக் குரல் தென்னிலங்கையில் வலுவடைந்துவரும் இந்தச் சூழலில், அத்தகைய போக்குக்கு ஆதரவான சக்திகள் சுலபமாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன.

அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் - அதாவது, அடுத்த ஆறு வார காலத்தின் பின் - புதிதாகப் பதவியேற்கும் ஜனாதிபதி, இவ்விடயத்தில் பெரும்பான்மையினரின் மேலாண்மைப் போக்கு அழுத்தத்துக்கு மசிந்து, வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான 1988ஆம் ஆண்டின் செப்ரெம்பர் 9ஆம் திகதிய வர்த்தமானி அறிவிப்பை ரத்துச்செய்யும் புதிய உத்தரவை விடுத்தாலும் விடுக்கலாம்.

அப்படி நேர்ந்தால் அதுவே தற்போதைய யுத்தநிறுத்த ஏற்பாடுகளுக்கு அடிக்கப்படும் சாவு மணியாகிவிடும் என்பது நிச்சயம்.

மூன்றரை வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட யுத்தநிறுத்த ஏற்பாடுகளும் அவை தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையும், அமைதி முயற்சிகள் தடைப்பட்டுப் போனதால், ஏற்கனவே நெருக்கடிக்குள்ளாகி, பரஸ்பரம் நம்பிக்கை குறைந்து, யுத்தம் எப்போது வெடிக் கும் என்ற ஆபத்து நிலையை நோக்கி நாட்டை நெட்டித் தள்ளிக்கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், தமிழரின் தாயகத்தைத் துண்டு போடும் பெரும்பான்மையினரின் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டால் யுத்தநிறுத்தம் ஒரேயடியாக நொறுங்கிப் போவது தவிர்க்கமுடியாததாகிப் போய்விடும்.

தமிழர் தாயகத்தைப் பிரிப்பது - பிளப்பது - என்பது தமிழர்களின் உரிமையோடு சம்பந்தப்பட்ட அடிப்படை விடயத்தில் கைவைக்கும் வேலையாகும். தமிழர் தரப்பு அதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கும் என்று யாரும் எதிர்பார்த்தால் அவர்கள் யதார்த்தம் அறியாத - புரியாத - ஏமாளிகளேயன்றி வேறில்லை.

இந்தச் சர்ச்சையை இப்போது கிளப்பி, அதில் குளிர்காய விளையும் மேலாண்மைவாதிகள், இது விபரீதத்தை விலை கொடுத்து வாங்கும் விவகாரம் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

# பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்து புனரமைப்புப் பணிக்காக நிறுத்தப்படுகிறது

## அவ்வேளையில் இலவச கடற்பயணத்துக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ்.பண்ணைப் பாலப் புனரமைப்புப் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காகப் பண்ணைப் பாலம் வழியான போக்குவரத்து எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது. யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

பண்ணைப் பாலம் புனரமைப்புப் பணிக்காக மூடப்படவுள்ளது. போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருக்கும் நாள்களில் கடல்வழிப் பயண ஒழுங்கு மேற்கொள்ளப்படும். புனரமைப்புப் பணி இடம்பெறும்.

இருவார காலத்துக்கு கடல்வழியாக பொதுமக்கள் பயணம் செய்ய இலவச பயணச்சீட்டு வழங்கப்படும். வியாபாரப் பொருள்களை கடல்வழியாகக் கொண்டுசெல்லக் கட்டணம் அறவிடப்படும். யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்தப் பணியை மேற்கொள்ளும் - இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, பண்ணைப் பாலம் புனரமைப்புப் பணி தொடர்பாக அரச அதிபர் தலைமையில் நேற்று யாழ். செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி. சுதாகர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் எம்.தவரட்ணம், வட பிராந்திய சிற்றூழியர் சங்கப் பிரதிநிதிகள், வேலணை பிரதேச செயலர், இராணுவ அதிகாரி பிரிகேடியர் ரத்னாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-ரி)

# நான் தேர்தலில் வென்று ஜனாதிபதியானால் அமைச்சரவையில் புலிகளுக்கும் பதவிகள்

## சித்தாலேப நிறுவன அதிபர் ஹெட்டிகொட தெரிவிப்பு

"நான் ஜனாதிபதியானால், அமைக்கப்படும் அமைச்சரவையில் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துக்கு பதவி வழங்கப்படும்."

ஐக்கிய இலங்கை பொதுமக்கள் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரும் 'சித்தாலேப' நிறுவன அதிபருமான மருத்துவர் விக்ரர் ஹெட்டிகொட சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த செவ்வியில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 20 ஆண்டுகளாக யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டிருந்த இந் நாட்டில் யுத்தத்தை இல்லாதொழித்து சௌபாக்கியம்மிக்க நாடொன்றாக ஸ்ரீலக்காவை உருவாக்கும் நோக்கை முன்வைத்தே நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன்.

வெளிநாடொன்றின் தலையீடு இன்றியே எமது பிரச்சினையை நாமே பேச்சு மூலம் தீர்த்துக்கொள்ளமுடியும்.

நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் உருவாக்கப்படும் அமைச்சரவையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைத்துவத்துக்கு பதவி வழங்கப்படும். அது மட்டுமன்றி முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளினதும் தலைமைத்துவங்களுக்கும் பதவிகள் வழங்கப்படும். மேலும் ஆறு ஆண்டு காலங்களுக்குள் நாட்டைச் சீர்படுத்தி அதன் பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வதே எனது நோக்கமாகும் - என்று அவர் தெரிவித்தார். (ஒ-206)

### அல்லைப்பிட்டியில் முண்டம் மீட்பு!

அல்லைப்பிட்டிக் கடற்கரையில் இரு கைகள், கால்கள் தலை ஆகியவை துண்டிக்கப்பட்ட முண்டம் ஒன்றை ஊர்காவற்றுறைப் பொலீஸார் நேற்றுக் கண்டெடுத்து யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கடற்படையினர் கொடுத்த தகவலை அடுத்தே இந்த முண்டம் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் மீட்கப்பட்டது.

முன்னதாக சம்பவ இடத்திற்குச் சென்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு விசாரணை மேற்கொண்டார். பின்னர் முண்டத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். பிரேதப் பரிசோதனைக்காக முண்டம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-13)

### மிதிவெடியகற்றப்பட்ட பத்தமேனி பிரதேசம் கையளிப்பு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மிதி வெடிகள் அகற்றப்பட்ட பத்தமேனிப் பிரதேசம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது. ஹலோரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர் இங்கு 10 ஆயிரத்து 250 சதுரமீற்றர் பிரதேசத்தில் 263 மிதிவெடிகளை அகற்றினர். இந்தப் பிரதேசம் கையளிப்பில் கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி ஏ.சத்தியசீலன், மிதிவெடிசெயற்பாட்டு நடவடிக்கை அலுவலர் எஸ்.டெனீசன், ஹலோரஸ்ட் நிறுவனப் பிரதேச மேற்பார்வையாளர் எஸ்.சுதன் ஆகியோர் கலந்துகொண்டனர். மிதிவெடிஅகற்றப்பட்டதென்பதை உறுதிப்படுத்தும் பத்திரத்தை உதவிப் பிரதேச செயலரிடம் எஸ்.டெனீசன் கையளித்தார். (ஒ-13)

# ஆசிரியர்களின் போராட்டத்தால் நேற்று பாடசாலைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய சுகவீன விடுமுறைப் போராட்டத்தால் குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகள் நேற்று இடம்பெறவில்லை.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 25 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று புதன்கிழமை ஒருநாள் அடையாள சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுமாறு ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த அழைப்பையேற்று குடாநாட்டிலுள்ள ஆசிரியர்கள் கடமைக்குச்செல்லாது பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தந்தபோதும் ஆசிரியர்களின் பணிப் புறக்கணிப்பால் கற்றல் செயற்பாடுகள் முழுமையாகப் பாதிப்படைந்தன.


நேற்றைய போராட்டம் நூறுசத வீதம் வெற்றியைத் தந்துள்ளதாகவும் - இந்தப் போராட்டம் காரணமாகத் தமிழ் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இலங்கை அரசுக்கும் சர்வதேச மட்டத்திற்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் - கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால் எதிர்வரும் 24ஆம் திகதிமுதல் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை போராட்டம் தொடரும் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-12-410)

### நாளை

புரட்டாதி 21
வெள்ளிக்கிழமை
07.10.2005
திதி: சதுர்த்தி
பிற்பகல் 04.30வரை
சதுர்த்தி விரதம்
முற்பகல் 08.02 வரை
சுபநேரம்: 06.02 - 07.32
ராகுகாலம்: 10.32 - 02.02
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடவுள், ஒரு கடமையைச் செய்ய உரிய நேரத்தை அளிக்காமல், கடமையை யார் மீதும் திணிக்கமாட்டார்.
-ஜான்ரஸ்கின்.



## விற்பனைக்கு

இந்தியா வாக்கிய திருக்கணித முறைப்படி ஆங்கிலம், தமிழ் மொழிகளில் ஜாதகம் தயாரிக்கக்கூடிய கம்பியூட்டர் சகல உபகரணங்களுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0112 390535

(40872)(26-18-15)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில்
இன்று (06.10.2005) வியாழக்கிழமை
நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி (B.A.)
பட்டம் பெறுகின்ற

**செல்வி மேனகா நடராஜா**

அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

*அம்பிகைபுரம்,*
*5 ஆம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.* (40873)(32-30-15-18)

திரு சு.தனுஸ்கோடி
(பெரியப்பா)
குடும்பத்தினர்.

## ஹட்டன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம்

## பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹட்டன் நஷனல் வங்கி யாழ். கிளையில் 30.07.2004 இற்கு முன்னர் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத அடகு நகைகள் 08.10.2005 சனிக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ். கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- முகாமையாளர்.

சி-45453)(30-15-18)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



### திரு. அ.அரியரத்தினம்

(பகுதித் தலைவர்)

வடமராட்சி வலயத்தில் 2004ஆம் ஆண்டின் சிறந்த ஆசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு இன்று (06-10-2005) வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கௌரவிக்கப்படும் எமது கல்லூரியின் பல்துறை ஆசான் **உயர்திரு. அ.அரியரத்தினம்** அவர்களை சேவை சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பணியாளர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,
கரவெட்டி.
(சி/45454) (24-30-15-18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### நாகமுத்து சுந்தரலிங்கம்
*திதி: 06-10-2005*

*தோற்றம்* 03-07-1933 — *மறைவு* 16-10-2004

அன்பால் எமை அணைத்து அறிவால் எமை உயர்த்தி பண்பால் பலர்போற்ற பாரினில் வித்திட்ட எம் தெய்வமே! ஆறாதப்பா உங்கள் பிரிவு என்றும் உங்கள் நினைவு நிலைத்திருக்கும்.

இன்று நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

V.C அடி,
ஏழாலை வடக்கு.
(40875)(46-30-15-18)

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டில் எம் உயிர்



*தோற்றம்* 06.10.1982 — *மறைவு* 06.10.2003

### யோகேஸ்வரன் அஜந்தீப்

*வருடங்கள் இரண்டானதுவோ!*
*அவனியினைப் பிரிந்து*
*ஆறவில்லை எம் துயரம்!*
*மாறவில்லை எம் கவலை!*
*வாடியே நாமிங்கு*
*இரத்தக் கண்ணீர் வடிக்கின்றோம்*
*கயவர் இல்லா உலகில்*
*மீண்டும் ஒரு கொடியில்*
*பூக்களாக மலர*
*உன்னையே பிரார்த்திக்கின்றோம்!*

பெற்றோர், சகோதரர்கள்.

ஐயனார் கோயிலடி,
6/7, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (40902)(30-15-18)

## 11ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 05 - 10 - 1932



இறைவன் அடியில் 26 - 09 - 2005

### அமரர் பொன்னையா அருணாச்சலம்

(ஐயாத்துரை)

26.09.2005 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் பிரிவறிந்து பல வழிகளில் உதவிபுரிந்தோர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆடியபாதம் வீதி,
கல்வியங்காட்டுச் சந்தி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(40898)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
சித்திரத்துறையின் சித்திரிப்பில்

'பேசும் தூரிகை'

## ஓவியக் கண்காட்சி

'துகிலிகை'
காலாண்டு ஓவியச் சஞ்சிகை வெளியீடு

இடம்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

காலம்: 7, 8, 9 ஒக். 2005
காலை 9.00 - 5.00 மணிவரை

நிகழ்ச்சி நிரல்
07-10-2005 காலை 9.00 மணி
(தொடக்க நாள் நிகழ்வு)

இறைவணக்கம்

தலைமையுரை:
திரு.S.N.வாசன் (முக்கிய ஆசிரியர்)

ஆசியுரை:
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

பிரதம விருந்தினர் உரை:
திரு.M.சின்னத்தம்பி

கௌரவ விருந்தினர் உரை:
திரு.வை.சிவசுப்பிரமணியம்

சிறப்பு விருந்தினர் உரை:
திரு.S.சாந்தகுமார்

திரு.திருமதி.வாகீசன்

'துகிலிகை' சஞ்சிகை வெளியீடு
வெளியீட்டுரை: திரு.பா.தனபாலன்

ஏற்புரை:
திரு.க.ஞானேஸ்வரன்

கண்காட்சி திறப்பும் பார்வையிடலும்

ஆர்வலர்களை
அன்புடன் அழைக்கின்றோம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
சித்திரக்கலைத்துறை

கண்காட்சி அனுசரணை:
**விவேகா நகைமாடம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(40884)

## உலக ஆசிரியர் தினம் ஒக்-5

### யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

எமது பிள்ளைகளுக்கு தமது தன்னலமற்ற கற்பித்தல் ஊடாக கல்வியிலும் இணைந்த பாட விதானங்களிலும் அகில இலங்கையில் தேசியமட்டப் போட்டிகளில் வெற்றிகளைப் பெறுவதற்கும் 2005ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் மாவட்டத்தில் மூன்றாவது இடத்தை வகிக்கக்கூடியதாக ஆக்கிய எமது அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், ஆசிரிய திலகங்களையும் கல்விசார ஊழியர்களையும் பெற்றோர்கள் ஆகிய நாங்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(40889)(30-15-18)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் 04-10-2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும் அமரர் ஜெகதீஸ்வரன், கனகாம்பிகை, லோகேஸ்வரன் (லண்டன்), ஞானாம்பிகை, ஜீவனாம்பிகை, சாரதாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திராதேவி, நகுலேஸ்வரன், சிவகவிதா (லண்டன்), ஜெயபாலன், பேரின்பராசன் ஆகியோரின் மாமனாரும் நாகம்மாவின் மருமகனும் சுயந்தா, கயந்தா, விஜிந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06-10-2005) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*சிலம்புப் புளியடி,*
*சங்கானை.* (40879) (46-30-15-18)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னையா கந்தசாமி



பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தசாமி 04-10-2005 அன்று காலமானார்.

அன்னார் பூரணி அம்மாவின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (சுவிஸ்), ராதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோதிமலர், பிரேமரூபா அவர்களின் பாசமிகு மாமனாரும் பிரவீனா, விதுஷன், ஹரிஷ்கா ஆகியோரின் அன்புப்பேரனும் தேவியின் வளர்ப்பு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்பு அறிவிக்கப்படும்.

*ஸ்ரீ முருகவாசா*
*பொலிகண்டி.* (40874) (46-30-15-18)

தகவல்:
மகன் க.ரவீந்திரன்

## இராமசாமி சிவலிங்கம் (யோகம்)

**(Computer Engineer - Dubai)**

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது (Dubai) இல் வசித்து வந்தவருமாகிய இராமசாமி சிவலிங்கம் (யோகம்) அவர்கள் 03.10.2005 திங்கட்கிழமை (Dubai) இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவஞானம் - காலஞ்சென்ற விஜயலஷ்மி தம்பதியரின் மருமகனும் குமுதினியின் அன்புக் கணவரும் றகிதாவைதினி, மேதினி, சுஹாஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துலிங்கம் (Dubai), கனகலிங்கம் (Bararin), காலஞ்சென்றவர்களான அஞ்சலிங்கம், யோகலிங்கம் மற்றும் மகேஷ்வரி (Canada), ஞானலிங்கம் (London), சோதியலிங்கம் (Canada), நவரட்ணலிங்கம் (Colombo), நாகேஸ்வரலிங்கம் (London) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சற்குணகுமாரி (நல்லூர்), நவமணி (Colombo), சறோஜினிதேவி (Canada), இராஜசூரியர் (Colombo), பிரேமா (London), புனிதவதி (Canada), கௌரி (Colombo), சிவாஜினி (London) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Dubai இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12,சங்கிலியன் வீதி,*
*நல்லூர்.* (40896) (30-15-18)

தகவல்:
திருமதி ச.முத்துலிங்கம்
(நல்லூர்).

## திருமதி சின்னத்தம்பி தங்கச்சியம்மா



உடுவில் தெற்கு, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி தங்கச்சியம்மா 03.10.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சரவணமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காசிப்பிள்ளை - கதிராசி தம்பதியரின் அன்பு மருமகளும் இராசநாயகி, இராசசௌந்தரி, சிவசுப்பிரமணியம் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தேவநாதன், பவாநாதன், ஸ்ரீரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும் தனஞ்செயன் (லண்டன்),கிறிசானந்தன் (DRRRS கச்சேரி, யாழ்ப்பாணம்), திஸ்சானந்தன் (ஆஸ்திரேலியா), யதுசா (யாழ். பல்கலைக்கழகம்), மதுசா, ஸ்ரீராஜ்பவன், ஸ்ரீரகுபவன், சிந்துஜா, திவியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2005) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாலாவோடை,*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.* (40893) (30-15-18)

தகவல்:
குடும்பத்தினர்.

# சேவையால் உயர்ந்தோருக்குக் கௌரவம்

**யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் இன்றைய அமர்வுகளில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும் மூவரின் வாழ்க்கைக் குறிப்புகள் இங்கு பிரசுரமாகிறது. நாளைய அமர்வில் கௌரவிக்கப்படுவோரின் வாழ்க்கைக்குறிப்புகள் நாளைய உதயனில் வெளியாகவுள்ளன.**

## சைவ பூஷணம் வல்லிபுரம் கந்தசாமி

**கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுபவரான சைவபூஷணம் வல்லிபுரம் கந்தசாமி அவர்களை அறிமுகப்படுத்துபவர் பட்டப்பின் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி.**

1931 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் திகதி வல்வெட்டித்துறைக்குச் சமீபத்திலுள்ள பொலிகண்டி கந்தவனக்கடவை என்ற கிராமத்திலே பிறந்த சைவபூஷணம் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை கரணவாய் வடக்கு சைவ வித்தியாசாலையில் பெற்றார்.

இடைநிலைக் கல்வியை இன்று நாவலர் பாடசாலை எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ள வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்றுக் கொண்டார். 1953 ஆம் ஆண்டு நாவலர் பாடசாலையிலேயே ஆசிரியப் பணிக்கு அவர் அமர்த்தப்பட்டார். ஆசிரியராகப் பணியாற்றும்போதே நாவலர் காவிய பாடசாலையில் பயின்று சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் தேர்வுகளில் சித்தி பெற்றதுடன், 1960 ஆம் ஆண்டு நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமானார். ஹொறவப்பொத்தான மகாவித்தியாலயம். மிகுந்தலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றில் பணியாற்றினார். 1974ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் முதலில் ஆசிரியராகவும் பின்னர் உபஅதிபராகவும் பணியாற்றினார்.

இவர் யாழ்.சிறைச்சாலை, கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலை ஆகியவற்றில் சிறைக்கைதிகளுக்கு ஒழுக்கமும் சமயமும் போதிக்கும் பணியை 1968 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை மெச்சத்தக்க முறையில் ஆற்றிவந்தார்.



1978ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இருபத்தேழு வருடங்களாக சைவபரிபாலன சபையின் கௌரவ பரீட்சைச் செயலாளராக இருந்து சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பாலபண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் வகுப்புகளை ஒழுங்கு செய்து கற்பித்தும் பரீட்சைகளை நடத்தியும் சைவசித்தாந்த பண்டிதர்களை உருவாக்கி வருகிறார். பல்லாயிரம் மாணவர்கள் தோற்றும் சைவபரிபாலன சபையின் சைவநெறித் தேர்வுகளை வருடந்தோறும் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக வடமாகாணமெங்கணும் நடத்தி வரும் மெச்சத்தகு பணியின் அச்சாணியாகக் கந்தசாமி அவர்கள் திகழ்கிறார்.

சைவபரிபாலன சபையில் தற்போது தலைவராக விளங்குகிறார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் போன்றோர் யாத்த சைவ, தமிழ் நூல்கள் வே. கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரம் போன்ற கிடைத்தற்கரியதாயிருந்த பதினைந்துக்கும் மேற்பட்ட பழம் பெரும் நூல்கள் மீள்பதிப்புற தாம் சார்ந்திருந்த நிறுவனங்களுக்குப் பெரும் பணியாற்றினார். சைவபூஷணம் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் அரை நூற்றாண்டிற்கும் மேலாக ஆற்றிவரும் தன்நலங் கருதாத சமய, சமூக, கல்விப் பணிகளைப் பாராட்டி அங்கீகரித்து யாழ்.பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்குகின்றது.

## அமரர் கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை

**தேகாந்த நிலையில் கௌரவ கலாநிதிப்பட்டம் பெறும் கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை அவர்களை அறிமுகப்படுத்துபவர் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்.**

புங்குடுதீவைச் சேர்ந்த வைத்தியபூபதி சித்தாந்தரத்தினாகரம் கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதியினருக்கு 1925ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பதினாறாம் திகதி மூத்த புதல்வனாக சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் பிறந்தார்.

சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் தமது ஆரம்பக்கல்வியைப் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும், யாழ்.இந்துக்கல்லூரியிலும் பெற்றார்.

பின்னர் இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பயின்று பி.ஏ. பட்டத்தினைப் பெற்றார்.

1950ஆண்டு ஜூன் மாதம் பட்டதாரியாகத் தாயகம் திரும்பிய சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே ஆசிரியப்பணியிலமர்ந்தார்.



இவரது ஆற்றலையும் கற்பித்தல் திறமையையும் கண்ட கல்வித் திணைக்களம் இவரை 1974 ஆம் ஆண்டு கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராக நியமனம் செய்தது. 1979 ஆம் ஆண்டு வரை கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலே விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

தமது உடல் நலக்குறைவினால் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பதவியினைத் துறந்து மீண்டும் 1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலேயே இணைந்தார்.

இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக இளைப்பாறும் வரை (1985) பணியாற்றினார். மிகச் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்த சிவராமலிங்கம்பிள்ளை அவர்கள், இந்துக் கல்லூரித் தமிழ், சமயத்துறைத் தலைவராகவும் தமிழ் மன்றம், இந்துஇளைஞர் கழகம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றினார்.

இந்துக்கல்லூரி விடுதி அதிபராக விளங்கிய இவர் இலங்கைக் கம்பன் கழகம், சேக்கிழார்மன்றம் ஆகியவற்றின் பெருந்தலைவராகவும் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் காப்பாளராகவும் இருந்து அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றினார்.

1992-1995 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட உறுப்பினராக இருந்து கலைப்பீடத்தின் வளர்ச்சிக்காக அரிய ஆலோசனைகளை வழங்கினார். பேராசானாக மதிக்கப்பட்ட இவர் கடந்த ஓகஸ்ட் 25ஆம் திகதி புகழுடல் எய்தினார்.

பல மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் தமிழ், சைவ எழுச்சிக்காகவும் அயராது உழைத்து அர்ப்பணிப்புடன் பணியாற்றிய உயர்திரு.கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளை அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தேகாந்த நிலையில் கௌர கலாநிதிப் பட்டம் வழங்குகிறது.

## முல்லைமணி வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

**கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுபவரான முல்லைமணி வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களை அறிமுகப்படுத்துபவர் வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் திருமதி இ.மகேஸ்வரன்**

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முள்ளியவளையிலே வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியினருக்கு 1933 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி முல்லைமணி சுப்பிரமணியம் பிறந்தார். ஆரம்பக் கல்வியை முள்ளியவளை சைவவித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்றார். பின்னர் மகரகம அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் பயின்று ஆசிரியராக வெளியேறினார். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் உறவினரான முல்லைமணி, அவருடன் உடனுறைந்து சிலகாலம் பண்டித பயிற்சிக் கலாசாலையில் பயின்றார்.

1957 தொடக்கம் 1972 வரை வவுனியா மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ஆகியவற்றிலே ஆசிரியராகப் பணியாற்றினார். ஆசிரியராகப் பணிபுரியும் காலத்திலே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகத் தமிழை சிறப்புப் பாடமாகப் பயின்று 1969 இல் பி.ஏ.சிறப்புப் பட்டதாரியானார்.



மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் 1973 தொடக்கம் 1986 வரை விரிவுரையாளராகப் பணியாற்றினார். முல்லை மாவட்ட கல்வி வளர்ச்சியை மனங்கொண்டு விரிவுரையாளர் பதவியை விட்டு முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் பதவியை ஏற்றார். அதிபர் பதவியிலிருந்து பிரதம கல்வி அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்ற முல்லைமணி பிரதேச கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி 1993 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை, நாடகப் பிரதி, வில்லுப்பாட்டு முதலான பல துறைகளிலே ஆழமான தடத்தினைப் பதித்துள்ள முல்லைமணி அவர்கள் இத்துறை சார்ந்த பதினைந்து நூல்களை எழுதியுள்ளார். இவரது எழுத்தாற்றலையும் அறிவையும் சிந்தனையையும் இவர் எழுதிய நூல்களோடு தெளிவாகக் காணலாம்.

இலங்கைக் கலைக்கழகப் பரிசில், இலங்கைச் சாகித்திய மண்டலப்பரிசில், வடக்குக்- கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் இலக்கியப் பரிசில், வீரகேசரி நாவல்போட்டிப் பரிசில் முதலான பரிசில்களைத் தமது எழுத்துக்களுக்காகப் பெற்றுள்ளார். கருத்தரங்குகள், கவியரங்குகளில் பங்கேற்று தமது ஆளுமையை வெளிப்படுத்திய முல்லைமணி, பல்வேறு துறைசார் ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே தமக்கென அழியாததோர் இடத்தினைப் பெற்றிருக்கும் முல்லைமணி வே.சுப்பிரமணியம் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்குகிறது.

# அரசுக்குப் பாதகம் ஏற்பட்டாலும் பேச்சுக்கள் மூலமே சமாதானமாம்

## 'யுனெஸ்கோ' மாநாட்டில் ஜனாதிபதி கூறினார்.

இலங்கையில் அரசுக்கு பாதகம் ஏற்பட்டாலும் பேச்சுகள் மூலமே சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பரிஸில் இடம் பெற்ற 'யுனெஸ்கோ' மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் தெரிவித்ததாவது:-

பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, பரிந்துணர்வு மற்றும் பேச்சுகள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தலாம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு பேச்சு மூலமான திட்டமொன்றை எமது அரசு முன்வைத்துள்ளது. இது சில நேர் மறையான முடிவுகளை தந்த போதிலும் நாம் மேற்படி பேச்சுகள் மூலமான அரசியல் தீர்வினை அடைவதற்கு முயற்சிக்க வேண்டியுள்ளது. சமாதானத்தை பொருளாதார அபிவிருத்தி மூலமாகவும் வறுமை ஒழிப்பு, புரிந்துணர்வு மற்றும் பேச்சுகள் மூலமும் ஏற்படுத்தமுடியும்.

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நாம் புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். எமது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது சிறுவர் துன்புறுத்தலையும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளையும் இல்லாது ஒழித்து, அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவிப்பதற்கும் மிகவும் கொடைமிக்க அவர்களின் வாழ்வை அனுபவிப்பதற்கும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

இலங்கையில் சமாதானம் ஏற்படாமைக்கு காரணம், கடந்த 20 ஆண்டு காலமாக நாட்டின் அபிவிருத்தி வீழ்ச்சியடைந்து வந்தமையே ஆகும். அபிவிருத்தி வீழ்ச்சிக்கு இலங்கை மக்களின் மனோநிலை பாதிப்புக்குள்ளானதே காரணமாகும். அபிவிருத்திக்கும் சுபீட்சத்திற்கும் பாரிய சவாலாக யுத்தமே இருந்தது என்று ஜனாதிபதி கூறினார். (க-ஒ)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கை கண்காணிப்புக் குழுவைப் பாதிக்காது

## அதன் தலைவர் உறுதிபடத் தெரிவிப்பு

இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள கண்காணிப்புக் குழுவில் ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்டோர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்களையும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கை அவர்களது பணியை எவ்விதத்திலும் பாதிக்காது.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கூறினார்.

தற்போது கண்காணிப்புக் குழுவில் 60 பேர் உள்ளனர். இவர்களில் 37 பேர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். வடக்கு, கிழக்கில் வழமைபோல் தமது பணிகள் தொடர்வதாகவும் அதில் எவ்வித மாற்றமும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வன்முறைகள் இடம்பெறுவதை தடுப்பதற்காக கண்காணிப்புக் குழு தீவிர கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும். தேர்தல் காலத்தில் வடக்கு - கிழக்கு நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளோம். தேர்தல் பரப்புரைகள் சூடு பிடிக்கும்போது கண்காணிப்புப் பணிகளும் தீவிரமடையும். வடக்கு - கிழக்கு கள நிலைமைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எம்மைச் சந்தித்து ஆராயவுள்ளது. தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் அவர்களும் ஈடுபடவுள்ளனர்.

தேர்தல் நாளன்று வடக்கு - கிழக்கு எல்லைப் பகுதிகளில் வாக்காளர்களின் நன்மை கருதி இராணுவ சூனியப் பிரதேசத்தில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடத் தயாராக உள்ளோம் - என்றார் கண்காணிப்புக் குழுத் தலைவர். (க-ஒ)

# புலிகள் மீதான பயணத்தடையை எதிர்த்து பெல்ஜியத்தில் கண்டனப் போராட்டம்

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் பயணத் தடையை நீக்க வலியுறுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதி பெல்ஜியத்தில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத் துறைக்கான ஆணையக அலுவலகம் முன்பாகக் கண்டனப் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான பயணத் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கவேண்டும் என்ற முழக்கத்தை முன்வைத்து இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இதனையொட்டி தடையை நீக்கவேண்டும் என்ற தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலான கையெழுத்தியக்கமும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கையெழுத்துக்களும் ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையரிடம் கையளிக்கப்படவுள்ளன.

புலம்பெயர் நாடுகளில் உள்ள அனைத்துத் தமிழர்களும் இந்தக் கண்டனப் போர் முழக்கக் கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் புலம்பெயர் நாடுகளில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் யாழ். பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் ஆகியோரும் பங்கேற்கக் கூடும் என்று தெரிகிறது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

விஜயதசமியை முன்னிட்டு நல்ல நிலையிலுள்ள மிருதங்கம் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. குறித்த தவணையில் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (40845)

### காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை, ஆனந்தன் வடலி வீதி, 3ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறையில் 2 பரப்புகளைக் கொண்ட 2 துண்டுக் காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சக்தி, இல.3 கொட்டைக்காடு லேன், கோண்டாவில் கிழக்கு. **T.P. No: 0777474775, 021-2223015, 021-2223056** (நேரில் தொடர்பு பகல் 1 மணி - 4 மணிவரை) **Email: Prakasan18@Hotmail.Com.** (40650)

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கருவேலடி வீதியில் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக 1¾ பரப்பில் குழாய்க்கிணற்றுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: காஞ்சனா பிரேம்குமார், கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.No.: 021-4590359 (40779)

### வீடு வாடகைக்கு

சுண்டுக்குழி விதானையார் வீதியில் ஏழு அறைகள் கொண்ட மாடிவீடு, வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0777 325545, 0212225780 (சி/45445)

### தவறிவிட்டது

கோயிலாமனை - கொடிகாமத்தைச் சேர்ந்த ப.சிற்றம்பலம் என்பவரது தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் வாகன அனுமதிப்பத்திரமும் 03.10.2005 அன்று யாழ்.நகர்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (40824)

04.10.2005 அன்று ஓமந்தையிலிருந்து முகமாலை நோக்கி வந்த தமிழீழ போக்குவரத்துக் கழக கடைசி சேவை பஸ்ஸில் உடுப்புகள் அடங்கிய கறுத்த **Bag** (பாக்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.செபரட்ணதாஸ், 171, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (40836)

நல்லூர்வடக்கு, கல்வியங்காடு, அருளம்பலம் லேனைச் சேர்ந்த கை.அருள்முகுந்தன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப் பத்திரம் என்பன அடங்கிய பார்சல் யாழ்ப்பாணத்திற்கும் கல்வியங்காட்டிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் அல்லது இத்தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். **T.P:.** 0776184559, 0776127515 (40629)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, கனடா **PR** உள்ள, 30 வயது, சதயம், 20¾ கிரக பாவமுடைய மணமகனுக்கு உயர்கல்வி கற்ற, கணனி அறிவுள்ள, சிவந்த அழகிய பண்பான மணமகள் தேவை. மணமகன் தற்போது இலங்கையில் உள்ளார். விரைவில் கனடா செல்லவுள்ளார். தொடர்பு: விளம்பர இல: 2708, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (40647)

### அமெரிக்க விஸா

55050 அமெரிக்க விசா லொத்தர் **Lateat** விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்பு கொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு. **Penquin Book Shop, $B_2/F_{23}$ Bloemendhal flats, Colombo-13. T.P.:077 3081764, 2438367** மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி **Receipt** அனுப்பப்படும். (சி/45719)

### ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக் கொள்ளவும் ஒருமுறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (40752)

**Modern Bridal Center**
31, Kandy Road, Ja.
அழகுக் கலைப்பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்.
பதிவுகள் சனி காலை 9 - 12 இற்கு இடையில் ஏற்கப்படும்.
**0776258151** (40843)(24-32-15-45)

## பண்ணாகத்தில் தபால், தந்திச் சேவை

சுழிபுரம்,ஒக்.6

பண்ணாகம் உப தபால் அலுவலகத்தில் பொதுமக்களின் பாவனைக்காகத் தொலைபேசி மற்றும் தந்திச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான சாதனங்கள் பொருத்தப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. (ஒ-28)

## அபிவிருத்திப் பணிக்கு பழைய மாணவர் உதவி

கைதடி,ஒக்.6

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அபிவிருத்திப் பணிக்குப் பழைய மாணவர் ஒருவர் நிதியுதவி வழங்கியுள்ளார்.

கைதடி வளர்மதி வீதியைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்துவருபவருமான பாடசாலையின் பழைய மாணவன் கதிரன் கருணாகரன் என்பவர் பத்தாயிரம் ரூபாவை அண்மையில் பாடசாலை அதிபரிடம் கையளித்துள்ளார். (202-75)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மானிப்பாய், கனகசபை வீதியைச் சேர்ந்த

**நடேசன் (பூவா) குமுதா**

அவர்கள் இன்று (06-10-2005) வியாழக்கிழமை B.A.(Hons) பட்டம் பெறுகின்றார்.
அவரை மென்மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கனகசபை வீதி, மானிப்பாய். (40848) (24-32-45-15)

நா.தணிகாசலம் கமலா குடும்பத்தினர்.

### அகங்கனிந்த நல்வாழ்த்துக்கள்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் இன்று (06.10.2005) வியாழக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்

**கௌரவ கலாநிதிப் பட்டம் பெறும்**

**சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமி**

அவர்களுக்கு எமது அகங்கனிந்த வாழ்த்துக்கள்.
எமது வித்தியாலயத்தின் மேம்பாட்டிற்காக கடந்த 50 வருடத்திற்கும் மேலாக ஆசிரியராக, அறங்காவலராக அர்ப்பணிப்பான சேவையை நல்கிய பெரியார் மேலும் பல சிறப்புக்களையும் பெற்றுவாழ நீடிய ஆயுளையும் சர்வவல்லமையையும் அளிக்க இறைவனை இறைஞ்சி வாழ்த்தி வணங்குகின்றோம்.

யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம். (40847) (42-32-34)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு.கா.குணசிங்கம்**

(அதிபர், யா/குடமியன்அ.த.க.பா., வரணி)



தென்மராட்சிக் கல்வி வலயத்தில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு வ.கி.மாகாணக் கல்வி அமைச்சின் விருதைப் பெறும் எமது பாடசாலை அதிபர் அவர்கள் மேலும் பல உயர்வுகளைப் பெறவேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(40856)(46-32-15-34)

யா/குடமியன்அ.த.க.பா., வரணி. பாடசாலைச் சமூகம்.

### துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் அதிபர் **க.கனகராசா** அவர்களது அன்பு மனைவி

**திருமதி ஸ்ரீவசந்தினி கனகராசா**

அவர்கள் கடந்த 01- 10- 2005 அன்று காலமானதையிட்டு மனம் வருந்துவதுடன், அன்னாரது இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(40854) (19-32-45-15)

பழைய மாணவர் சங்கம், யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

### ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 20 - 10 - 1955



உதிர்வு 30 - 09 - 2000

**அமரர் சுந்தரம் யோகானந்தா**

*(அதிபர் - நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை)*

திதி: பூர்வத் திருதியை 06-10-2005

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாது எம் மனது.

*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (40802)(46-32-45-15)

மனைவி, பிள்ளைகள்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெறும்

**சிவஞானசுந்தரம் வசீகரன்**

(B.A.Hons பொருளியல்துறை சிறப்பு)
(ASU முன்னாள் தலைவர்)

அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (40821)(32-15-45) நண்பர்கள்.

### மனமுவந்து வாழ்த்துகின்றோம்



*சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவன்*

செல்வன் **வைகுந்தராஜா சசிகாந்த்**

B.Com. (Hons), (Acc. Special)

*இன்று (06.10.2005) யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வணிகமாணி (கணக்கியல் சிறப்பு) பிரிவில் பட்டம் பெறும் இவரைப் பாராட்டி மகிழ்வதோடு மேலும் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துகின்றோம்.*

*சிவன்கோயில் றோட், சாவகச்சேரி (மண்டைதீவு).* (40850) (30-19)

அப்பா, அம்மா, சகோதரர்கள்.

### மனமுவந்து வாழ்த்துகின்றோம்



எமது செல்வன்

**வைகுந்தராஜா சசிகாந்த்**

B.Com.(Hons), (Acc. Special)
இன்று (06-10-2005) வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வணிகமாணி (கணக்கியல் சிறப்பு) பிரிவில் பட்டம் பெறும் இவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சிறப்புகள் பெற்று எதிர்காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

கொக்குவில். (40858) (24-34-32-15)

பெரியப்பா, பெரியம்மா, கண்ணன்.

### கலந்துரையாடல்

கிராமிய வங்கிகளை புனரமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று 07.10.2005 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் கிராமிய வங்கிகளைச் செயற்படுத்தும் சங்கத்தலைவர்கள், பொதுமுகாமையாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை.

(சி/45446)(32-45-15)

### ஓராண்டு நினைவுகளுடன்...

மண் மகிழ 1930 - 04 - 10



விண் மகிழ 2004 - 10 - 16.

**திருமதி இலட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்**

*திதி : திருதியை (2005-10-06)*

தன்னலம் பாராது பிறர்நலம் பேணி
தரணியில் தழைத்தோங்கச் செய்த எம் தாயே!
ஆயிரம் உறவுகள் இருந்த போதிலும்
அம்மா என்றழைக்க உறவு ஒன்றில்லையே!
இன்சொல் பேசி இனியவராய் இருந்துவிட்டு
இடை நடுவில் தவிக்க விட்டு ஏனம்மா மறைந்தாய்?
ஆண்டொன்றைக் கடந்து விட்ட போதிலும்
அடி மனதில் பதிந்து விட்ட உன் நினைவுகள்
ஆறாத்துயரில் ஆழ்த்துதம்மா!

'ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்!'

இல.4H , ஆலடி வீதி, தோணிக்கல், வவுனியா. T.P. 024-2223787

குடும்பத்தினர்.
வன்னிச்சி அம்மன் கோயில் மேற்கு, வல்வெட்டித்துறை. T.P. 077-6401000

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?

*நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு திடீர் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. 'ஞாயிறு லங்கா தீப' இதழில் ரன்ஜித் ஆனந்த ஜெயசிங்க எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.*

ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள வேளையில் ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு திடீர் பொதுத்தேர்தல் நடைபெற வாய்ப்பு உள்ளதா? என்ற கேள்வியே தற்போது பலராலும் எழுப்பப்படுகிறது. பொதுத் தேர்தல் நடைபெறுமாயின் அந்தத் தேர்தலை எப்போது நடத்துவது என்பது பற்றிய முடிவை எடுக்கும் அதிகாரம் அரசமைப்பின்படி ஜனாதிபதிக்கே உள்ளது. ஆனால் இதுபற்றி இதுவரை எந்த முடிவையும் அவர் மேற்கொண்டார் எனத் தெரியவில்லை.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்தே இவ்வாண்டு நவம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. தற்போதய ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைய இன்னும் இரண்டு மாதங்களுக்குக் குறைவான காலமே உள்ளது. நவம்பர் 17 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுபவர் இரண்டு வாரங்களுள் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் தற்போதய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைகிறது.

### நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?

தனது பதவிக்காலம் முடிவடையும் முன்னர் தேவைப்படின் நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியும். நவம்பர் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தை விட வேறு முக்கிய பணிகள் நாடாளுமன்றத்தால் தற்போது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் இல்லை. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் குறைநிறைப்புப் பிரேரணை மூலம் நிதியைப்பெற்று அடுத்த வரவு செலவுத் திட்டம்வரை அரசை நடத்துவதற்கு வழிவகை உண்டு.

ஜனாதிபதி திடீரென நாடாளுமன்றத்தைக் கலைப்பாராயின் எந்த நோக்கத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாடம் புகட்டும் நோக்கில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கூடும் என்பதே சிலரின் கருத்தாகும். இதன் மூலம் ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுசரணை வழங்கக்கூடும் என்பதே அவர்களின் வாதமாகும்.

ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் சபையே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது, பிரதமர் தனது வெற்றிக்காக ஜே.வி.பி, ஹெலஉறுமய சிங்கள மஹா சம்மத, பூமிபுத்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி போன்ற ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட 23 அரசியல் கட்சிகளுடன் புதுமையான கூட்டை ஏற்படுத்தியுள்ளார். அவரது கூட்டிலுள்ள கட்சிகளில் ஓரளவு பொதுமக்கள் ஆதரவைக் கொண்ட கட்சி ஜே.வி.பி. மட்டுமே என்பதை விசேடமாகக் குறிப்பிடலாம். இந்த அடிப்படையில் பார்க்கும்போது இதனைச் ஸ்ரீ.ல.சு.கட்சி- ஜே.வி.பி.கூட்டு என்றே கூறலாம்.

### மஹிந்த- ஜே.வி.பி கூட்டணி

ஜனாதிபதியுடன் முரண்பட்டு அரசை விட்டு வெளியேறிய ஜே.வி.பியினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் உடன்பாடு செய்துகொண்டனர். தாங்கள் மஹிந்த ராஜபக்ஷ என்ற தலைவருக்காகவே அவ்வாறு உடன்பாட்டிற்கு வந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அதன் பின்னர் கிராம மட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக உழைத்து வருகின்றனர். இதுவரை தமது தலைவர்களுக்கு வாக்களிக்குமாறு மக்களை வேண்டிய ஜே.வி.பி.இம்முறை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் வேண்டுகின்றனர். இவ்வாறான நிலைமை ஜனாதிபதிக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. விசேடமாகத் தேசியப் பிரச்சினைகள் தொடர்பாகப் பிரதமர் ஜே.வி.பியினரின் நிலைப்பாட்டை ஜனாதிபதி கடுமையாக விமர்சித்துள்ளார். தான் தனது அரசையே அடகுவைத்துக் கைச்சாத்திட்ட ஆழிப்பேரலை அனர்த்தப் பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டையே ரத்துச்செய்வது என



மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி.யினருடன் இணங்கி ஒப்பந்தம் செய்துள்ளார். இது ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்.

மஹிந்த ராஜபக்ஷ யதார்த்த அரசியல்வாதி ஆவார். இவ்வாறான உடன்பாடுகளிலுள்ள ஆபத்துக்களை அவர் நன்கு அறிவார். மேலும் 1982 ஜனாதிபதித் தேர்தலில் ஹெக்டர் கொப்பேக்கடுவவுக்கு ஏற்பட்டது போல் முடக்கநிலை ஏற்படாத விதத்தில் சிற்சில உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற மஹிந்த முயற்சித்து வருகிறார்.

**தமிழில்: கஜனி**

நாடாளுமன்றத்துக்காகத் திடீர் தேர்தலை நடத்துவது என ஜனாதிபதி தீர்மானித்தால் அதை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நடத்துவதற்குத் தேவையான காலஅவகாசம் போதுமானதாக இல்லை என்றே கருதவேண்டியுள்ளது. பொதுத்தேர்தல் ஒன்று இடம்பெறுமானால் ஜனாதிபதி கூட்டமைப்புச் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தாமல் தனது கட்சி சார்பிலேயே வேட்பாளர்களை நிறுத்துவார். ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க ஜனாதிபதி ஒருபோதும் தயாரில்லை. ஸ்ரீ.ல.சு.கட்சி தனியாகப் பொதுத்தேர்தலில் போட்டியிட்டால் ஐ.தே.கட்சி சுலபமாக வெற்றிபெறும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னராகப் பொதுத்தேர்தலை நடத்தி அதில் தோல்வியடைந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது எவ்விதத்திலும் மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிக்காது. இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்த தற்போது காலஅவகாசம் இல்லாமல் இருப்பது உருவாகக்கூடிய ஆபத்திலிருந்து மஹிந்த ராஜபக்ஷ தப்ப வாய்ப்பாக அமைந்துவிட்டது.

### பொதுத்தேர்தல் நடைபெற்றால்

தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அமைச்சர்களின் அதிகாரங்கள் குறையும். அதேநேரம் அரச சொத்துக்களைத் தேர்தலுக்காகப் பயன்படுத்தும் வாய்ப்புக் குறையும். இவற்றைவிட வேறு எதுவித மாற்றங்களும் நிகழக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ இவ்வேளையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அது தனக்குச் சாதகமான நிலையை உருவாக்கும் என நினைக்கிறார். அதற்கு அவர் ஜனாதிபதித் தேர்தலின்போது கட்சியின் பிரதேச அமைப்புகளுக்குப் பொறுப்பான அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் தலைவரான தனது வெற்றிக்காக நூற்றுக்கு நூறுசதவீதம் அர்ப்பணிப்புடன் செயற்படமாட்டார்கள். ஆனால் பொதுத்தேர்தல் இடம்பெற்றால் போட்டியிடவிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கட்சிக்காகப் பாடுபடுவர். அதன்மூலம் வெற்றிவாகை சூடலாம் என்று காரணம் கூறுகிறார். இதிலும் ஓரளவு உண்மை உள்ளது.

### ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு

திடீர் தேர்தலை நடத்துவது என ஜனாதிபதி தீர்மானித்தால் ஐ.தே.கட்சிக்கோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவுக்கோ பாதகமான நிலைமை ஏற்படாது என்றே கூறலாம். கிராம மட்டத்தில் ரணிலின் அரசியல் செயற்பாடுகள் சக்திமிக்கதாக அமையும். மேலும் தற்போது கிடைத்துவரும் தகவல்களின்படி ஐ.தே.கட்சியுடன் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் தோட்டத் தொழிலாளர் காங்கிரசும் இணைய அதிக வாய்ப்புகள் உள்ளன. (04.10.2005 நிலவரப்படி)

மஹிந்த ராஜபக்ஷ எடுக்கும் பல முடிவுகள் குறித்து கட்சியின் தலைவி சந்திரிகாவும் அனுரா பண்டாரநாயக்காவும் அடிக்கடி கருத்துகள் வெளியிடுகின்றனர். இதனால் மக்கள் குழப்பமடைகிறார்கள். ஆனால், ரணில் விக்கிரமசிங்க இவ்வாறான சர்ச்சைகளை எதிர்கொள்ளவில்லை. இருப்பினும் அவரது கட்சியைச் சேர்ந்த ஒரு சிலரின் பேச்சுகளால் அவருக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. அது குறித்து ஏற்கனவே ஐ.தே.கட்சி எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு 9 நாள்களுக்கு முன்னர் அதாவது 8.11.2005 அன்று தற்போதைய அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் பல்வேறு சலுகைகளை வழங்கி வாக்காளர்களைக் கவரக்கூடும் என்று ஐ.தே.கட்சி சந்தேகிக்கிறது. இது நியாயமான சந்தேகமே. இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க எதிர்க்கட்சி முனைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் திடீர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் இருதரப்பினருக்கும் சாதகங்களும் பாதகங்களும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படால் கட்சியின் தலைவர் என்ற வகையில் ரணில் புதிய அனுபவங்கள் எதையும் எதிர்நோக்கப் போவதில்லை. ஆனால், இவ்வாறு பொதுத் தேர்தல் ஒவ்வொரு ஆண்டும் அல்லது ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடத்துவதால் நாட்டிற்குப் பயனேதுமில்லை. அடுத்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அடுத்து மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. ஆண்டு தோறும் தேர்தல்களுக்காகப் பலநூறு கோடி ரூபாவை செலவிடுவதை நாடு தாங்காது.

எனவே ஒவ்வொருவரும் தத்தமது குறுகிய அரசியல் நோக்கங்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு நாட்டின் நன்மை குறித்துச் சிந்தித்து உரியவேளைகளில் தேவையான தேர்தல்களை மட்டும் நடத்துவது பொறுப்புள்ள அரசியல் தலைவர்களது கடமையாகும். தற்போது நாட்டில் நிலவும் அரசியல் கலாசாரம் குறித்து மக்களுக்கு நம்பிக்கையில்லை. வாக்குகளைப் பொதுவாக அரசியல்வாதிகள் மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகளில் எதனை அவர்கள் நிறைவேற்றுகின்றார்கள் என்பதை மக்கள் அறிவர். எனவே தேவையற்ற தேர்தல்களை நடத்தாமல் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாத்துத் தேவையான தேர்தல்களை மட்டும் நடத்தினால் அது நாட்டுக்குச் செய்யும் சேவையாக அமையும். ✱

## சாயி சிந்தனை



### கல்வியால் வரும் பட்டங்கள் எல்லாவேளைகளிலும் உதவமாட்டா!

*சமூகத்தில் மதிப்புமிக்க ஒரு அறிஞர் இருந்தார். ஓர் நாள்ஆற்றைக் கடந்து அக்கரைக்குப் போகவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. ஆற்றங்கரையில் ஓடக்காரன் ஒருவனை அமர்த்திக் கொண்டு ஓடத்தில் ஆற்றைக் கடக்க ஆயத்தமானார்.*

*பயணத்தை ஆரம்பித்த சிறிது நேரத்தில் "ஓடக்காரரே! இன்று நாட்டில் என்ன புதினம்?" என அவர் ஓடக்காரனை வினவினார்.*

*ஐயா, நாட்டில் இன்று என்ன புதினம் என்பதை நானறியேன்! எனது வயிற்றுப் பிழைப்புக்கு இந்த ஓடம் உதவுகிறது. பிறகேன் நான் மற்றவற்றைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்- என்று ஓடக்காரன் விடையளித்தான்.*

*இதைக்கேட்டு அந்தக் கல்விமான்-*

*"உன்னுடைய வாழ்க்கையில் மூன்றில் ஒரு பகுதி எவ்வித பிரயோசனமும் அற்றுக் கழிந்து விட்டதே" எனக் கூறினார்.*

*மேலும் சிறிது நேரம் கழித்து "இப்போது என்ன நேரமிருக்கும் ஓடக்காரனே" என்று அந்தக் கல்விமான் ஓடக்காரனைக் கேட்டார்:*

*"ஐயா, எனக்கு நேரம் பார்க்கவே தெரியாதே! வானத்தில் சூரியன் நிலையைக் கொண்டு நான் நேரத்தைக் கணிப்பேன்" என்று அந்த ஓடக்காரன் கூறினான்.*

*"ஐயையோ! உன்னுடைய வாழ்நாளில் பெரும்பகுதி எவ்வித பிரயோசனமும் அற்றுக் கழிந்து விட்டதே!" என்று அக்கல்விமான் வருத்தப்பட்டுக்கொண்டார்.*

*ஓடம் மேலும் சிறிது தூரம் சென்றதும் திடீரென்று காலநிலையில் மாற்றம் ஏற்பட்டது. காற்றின் வேகம் படிப்படியாக அதிகரித்து சுழல்காற்றாக உருவெடுத்து, ஓடம் நீரில் தத்தளிக்கத் தொடங்கியது. எங்கே அடுத்த கணம் ஓடம் நீரில் மூழ்கி விடுமோ என்ற அச்சம் ஓடக்காரனைப் பற்றிக் கொண்டது. ஓடக்காரன் இப்போது அந்தக் கல்விமானை நோக்கிப் பவ்யத்துடன் "ஐயா, தங்களுக்கு நீச்சல் தெரியுமா?" என்று கேட்டான்*

*"ஐயையோ! நான் ஒரு போதும் நீச்சல் கற்றுக் கொண்டதில்லையே!" என்றார் அக்கல்விமான், கவலையோடு.*

*"ஐயா, அப்படியானால் நீங்கள் உங்களது முழு வாழ்க்கையையே பயனற்ற வகையில் கழித்து விட்டீர்கள்: இப்போது உங்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்" என்றான் அந்த ஓடக்காரன்.*

*வாழ்க்கையில் கல்வியால் பெற்ற அறிவும், பட்டங்களும் மனிதனுக்கு எல்லா வேளைகளிலும் உதவும் என்பு நிச்சயமல்ல; வாசிப்பினால் பெற்ற அறிவு எந்நேரமும் பயன்படும் எனவும் கொள்ள இயலாது. அனுபவ அறிவே மனிதனுக்கு ஆபத்து வேளைகளில் கைகொடுக்கும்"- என்பதையே இக்கதை விளக்குவதாக பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தனது அடியார்களுக்குக் கூறுவதுண்டு.*

ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருட சந்தா ரூ300 மட்டுமே
தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272
கல்வி மாற்றங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் ஏன்? எதற்கு?
வாசியுங்கள் அகவிழி

# மணல்லொறி மீது தாக்குதல்!

சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து ஏற்றிச்சென்ற லொறி மீது மோட்டார் சைக்கிளில் வந்து வழி மறித்த இனந்தெரியாதோர் சிலர் தாக்குதல் நடத்தி சேதப்படுத்தினர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு நாவற்குளி இறால் பதனிடும் தொழிற்சாலைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் லொறியின் முன்பக்கக் கண்ணாடி உடைக்கப்பட்டதோடு, சக்கரங்களும் கம்பியால் குத்திச் சேதமாக்கப்பட்டன. (ஒ-75)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுழிபுரம் வடக்கு, செட்டியகுறிச்சியை சேர்ந்தவரும் தற்போது பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதியில் வசிக்கும் சுவாமிநாதன் - இராஜேஸ்வரி தம்பதி களின் சிரேஷ்ட புதல்வன்

**சுவாமிநாதன் சர்வானந்தன்**

இன்று (06.10.2005) வியாழக் கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் (B.A.) பெறுவதையிட்டு கந்தர்மடம் இல. 92, பழம் வீதியில் வசிக்கும் திரு.கனகசபாபதி மாமா குடும்பத்தினர், சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பில் வசிக்கும் திரு.கா.சண்முகலிங்கம் பெரியப்பா குடும்பத் தினர், இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பில் வசிக்கும் திரு.சிவசிதம்பரநாதன் மாமா குடும்பத்தினர் ஆகியோர் மேலும் பல பட்டங்கள் பெற்று வளமாக வாழ வாழ்த்து கின்றார்கள்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சைவ பரிபாலன சபையின் தலைவர் சைவப் புலவர் **வல்லிபுரம் கந்தசாமி** அவர்கள் இன்று (06.10.2005) வியாழக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெறுவதையிட்டு சைவபரிபாலன சபைப் பணியாளர்கள் ஆகிய நாம் மகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் தெரிவிக் கின்றோம்.

*சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.* (40783)(50) **பணியாளர்கள், பரீட்சைப்பகுதி.**

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது நிறுவனங்களின் தலை வரும் ஆயுள் உறுப்பினருமான இராசையா காண்டீபன் அவர்கள் இன்று(06.10.2005)வியாழக்கிழமை கலைமாணி தமிழ் சிறப்புப் பட்டத் தைப்(*B.A.(Hons) Tmi.Spc.*) பெறு வதையிட்டு பாராட்டி வாழ்த்துகின் றோம்.

**குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலையம், குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம்.**

"வீரமனை", குப்பிளான்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தையா சிவராஜா *B.A (Hons) Tmi.Spc.* இராசையா காண்டீபன் *B.A (Hons) Tmi.Spc.*

இன்று (06.10.2005) வியாழக்கிழமை இவர்கள் கலைமாணி தமிழ்ச் சிறப்புக் கலைப்பட்டம் பெறுவதை மனமார வாழ்த்துகிறோம்.

**"வீரமனை", குப்பிளான்.** **- மைத்துனன்மார், தம்பிமார்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று (06-10-2005) வியாழக்கிழமை நடைபெற இருக்கின்ற பட்டமளிப்பு விழாவின்போது இப்பாடசாலையின் பழைய மாணவர்களான

செல்வி **இரஞ்சினி சாம்பசிவம்** அவர்கள்
*(ஆசிரியை, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)*

**திரு.பே.ஸ்ரீகாந்தன்** அவர்கள்
*(ஆசிரியர், மன்.பெரியமடு அ.த.க.பாடசாலை)*

ஆகிய இருவரும் பொருளியல் பாடத்துறையில் சிறப்புப் பட்டம் பெறுகின்றனர். இவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, கல்வியில் மேலும் சிறக்கவும் பதவியுயர்வுகள் பெறவும் பன்றித்தலைச்சி கண்ணகையின் அருள்பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்.* (40806)(50) **அதிபர், ஆசிரியர்கள்.**


## இறப்பு பிறப்பை பதிவு செய்வதற்கு செவ்வாய்தோறும் விசேட சேவை

யாழ்ப்பாணம், ஒக்.6

காலங்கடந்த இறப்பு மற்றும் பிறப்பு களைப் பதிவுசெய்வதற்கும் பதிவுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் விசேட சேவை ஒன்று நடத்தப்படவுள் ளது.

அடுத்தவாரம் முதல் பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் காலை 9 மணிதொடக் கம் நண்பகல் 12 மணிவரை வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயக அலுவல கத்தில் இச்சேவை நடத்தப்படவுள்ளது என வடக்கு-கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது:-

காலங்கடந்த இறப்பு பிறப்புப் பதிவுளைச் செய்வதற்கும் பதிவுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் மக்களுக்கு உதவும் பொருட்டு இவ்விசேட சேவை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங் களுடன் செவ்வாய்க்கிழமைகளில் எமது அலுவலகத்திற்குச் சமுகமளித்துத் தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியும்.

காலங்கடந்த பிறப்புப் பதிவில் தாய், தந்தை, பிள்ளை மூவரும் சமுகமளித்துப் பதி வினை மேற்கொள்ளமுடியும்.

வடக்கு வலயத்திலுள்ள சகல மாவட்டங் களைச் சேர்ந்தவர்களும் இந்தச் சேவை மூலம் பயன்பெறலாம் என்று அவர் தெரிவித்தார். (ஒ-202- 204)

## சமாதான கருத்தரங்கு ஈவினையில் நாளை

கொழும்பு,ஒக்.6

கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் (CHA) அனுசரணையுடன் சமூக அபிவிருத்தி மன்றம் சமாதானமும் அபிவிருத்திக்குமான கருத்தரங்கு ஒன்றை இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஈவினை சமூக அபிவிருத்தி சேமிப்புக் கழக் காரியாலயத்தில் நடத்தவுள்ளது

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி என்ஜெகதீசன் தலைமையில் நடை பெற உள்ள இந்த நிகழ்வில் 'சமாதானமும் அபிவிருத்தியும்' எனும் தலைப்பில் ஈவினை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவார் எஸ். செல்வபிரகாசம் கருத்துரை நிகழ் த்துவார்

அபிவிருத்திக்குச் சமாதானம் அவசியமா? என்னும் தலைப்பில் ஈவினை கிராமசேவை யாளர் கே.விக்கிரமசிங்க உரை நிகழ்த்து வார்

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெறும். (3-204)

## அஞ்சல் அட்டை விநியோகத்திற்கான நடமாடும் சேவை நடத்துவதில் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக்.06

யாழ். அஞ்சல் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவு ஆண்டுதோறும் நடத்தும் அஞ்சல் அடையாள அட்டை விநியோகத்திற்கான நடமாடும் சேவையை இம்முறை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை யில் தோற்றும் மாணவர்கள் அஞ்சல் அடையாள அட்டையைப் பயன்படுத்துகின்ற னர். இதற்காக பாடசாலைகளில் அஞ்சல் அடையாள அட்டை விநியோகிப்பதற்கான நடமாடும் சேவை வருடந்தோறும் நடத் தப்பட்டு வந்தது. இவ் வருடமும் அத்த கைய சேவையை நடத்தும்படி அஞ்சல் திணைக்களத்திடம் பல பாடசாலைகள் அழைப்புவிடுத்திருந் தன.

இந்நிலையில் உத் தியோகத்தர் பற்றாக் குறை மற்றும் பிராந் திய நிர்வாக உத்தி யோகத்தர் நியமனத் தில் ஏற்பட்டுவரும் தாமதம் போன்ற காரணங்களினால் நடமாடும்சேவையை நடத்தமுடியாதுள்ள தாகவும் யாழ். பிர தம தபாலக வட்டா ரங்கள் தெரிவித் தன. (ஒ-12)

## சைவநெறித் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக்.06

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் நடத்திவரும் சைவநெறித் தேர்வு அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று சைவ பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வருடம் தரம் 2 இல் இருந்து 12 வரையான வகுப்புகளைச் சேர்ந்த 89 ஆயிரத்து 720 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்வுகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக் களப்பு, கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 502 நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தரம் 12 மாணவர்களுக்கு இந்துசமயம், இந்துநாகரிகம் ஆகிய பாடங் களிலும் தேர்வு நடைபெறும். (ஒ-203)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 02 - 1933



உதிர்வு 06 - 10 - 2003

அமரர் **துரையப்பா ஞானசேகரம்** (கனடா)
(சுன்னாகம், ஞானம்ஸ் லைட் உரிமையாளர்)

காலங்கள் இரண்டு ஓடியும்
காலன் மேலுள்ள கோபம் - ஆறவில்லை
என்ன வரம் கேட்போம் - உன்
துயரில் இருந்து மீள்வதற்கு.

கலையாத நினைவுகளோடு...
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்** (கனடா, சுவிஸ்).

தகவல்:- **றதிஷா கருணாகரன்** (மகள், சுவிஸ்). (40807)(50)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 11 - 1938



மறைவு 30 - 09 - 2000

அமரர் **பொ.குகதாசன்**
[பிரபல கட்டடக் கலைஞர்]
**திதி: 06-10-2005**

**குடும்பத்தின் குலவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
எம் வாழ்வை இனிதாக்கி
எமக்கு நல்வழி காட்டிய தெய்வமே!
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஐந்து ஆனாலும்
உங்கள் நினைவுகள் எமைவிட்டு அகலாது.**

'கேமாலயம்' அல்வாய் தெற்கு. (40818)(50) **மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**

## ஓராண்டு நினைவஞ்சலி 48 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 : 03 : 1916 — உதிர்வு 17 : 09 : 2004



அமரர் **சிவயோகமலர் இரத்தினம்**

மலர்வு 03 : 08 : 1902 — உதிர்வு 10 : 05 : 1958



அமரர் **சபாபதிப்பிள்ளை இரத்தினம்**

**எம் குடும்ப விருட்சத்திற்கு
நீராகி வேராகி நின்று நிழல் நிரப்பி
வாழ்வாங்கு நாங்கள் வாழ
வழியாவும் காட்டி வைத்து - இன்று
பதறியழ வைத்துவிட்டு பரமன் தாழ் அடைந்துவிட்ட
எம் அன்புத் தெய்வங்களை நினைவு கூருகின்றோம்**

*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.* (40810)

'சுகிர்தா மகால்' உடுவில், சுன்னாகம்.

தகவல்: இ.சாம்பசிவம் உடுவில்.

# ஜே.வி.பி. வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்களை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கும்

கொழும்பு, ஒக்.6

1988 மற்றும் 1989 ஆகிய காலப்பகுதிகளில் ஜே.வி.பியின் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் 1994ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அரசியல் பழிவாங்கலுக்குட்பட்ட 60 ஆயிரம் பேருக்கும் மற்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து அரசியல் பழிவாங்கலுக்குட்படுபவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் விவரங்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

-இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தனாயக்க.

1988, 1989 ஆகிய காலப்பகுதிகளில் ஜே.வி.பியினரின் வன்முறை நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட 1,500 பேர் தமக்கு நிவா ரணம் பெற்றுத் தருமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய, பொதுச் செயலாளர் வேரகொட மற்றும் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸஅத்தனாயக்க ஆகியோரை சிறிகொத்தாவில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்து இவ்வேண்டுகோளை விடுத்தனர். ஒவ்வொருவரும் தாங்கள் எதிர்கொண்ட சேதங்களையும் விவரங்களையும் ஐ.தே.கவிடம் சமர்ப்பித்தனர்.

இச்சந்திப்பின்போதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

1988 மற்றும் 1989 ஆகிய காலப்பகுதிகளில் ஜே.வி.பியினரின் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை ஐ.தே.க. திரட்டிவருகிறது. இவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு இவர்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

அத்தோடு, 1994ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 60 ஆயிரம் பேரின் விவரங்களும் திரட்டப்பட்டுள்ளன. இவர்களுக்கும் உரிய நிவாரணங்கள் வழங்கப்படுவதோடு, இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணங்கள் வழங்கப்படும்.

இதுதொடர்பான விவரங்களைத் திரட்ட ஐ.தே.க. பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

வன்முறைகளைப் புரிந்த ஜே.வி.பியினர் தேசப்பற்றாளர்கள்போல் இப்போது தங்களை காட்டிக் கொள்கின்றனர். இவர்களுடன் பிரதமர் கூட்டுச் சேர்ந்துள்ளார். இவ்வாறான பயங்கரவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் நாட்டில் பழையபடி ஜே.வி.பி. வன்முறைகள் தான் ஏற்படும்.

ஆகவே, இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி மக்கள் அனைவரும் சந்தோசமாக வாழவேண்டும் என நினைக்கின்ற ஒரேயொரு தலைவர் ரணில் விக்ரமசிங்க மட்டும்தான். இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வாக்களித்து அவரை நீங்கள் வெற்றிபெறச் செய்யவேண்டும். - என்றார். (க-3)

# சீனியர் தொண்டமான் - பிரதமர் மஹிந்த இருவரின் படங்களுடன் சுவரொட்டிகளா?

## விஷமத்தனம் என ஆத்திரப்படுகிறார் ஆறுமுகனார்

கொழும்பு, ஒக்.6

மலையகத்தில் சௌமியமூர்த்தி தொண்டமானின் (சீனியர் தொண்டமானின்) படங்களுடன் ஆளுங்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் படங்களையும் இணைத்து பாரிய அளவிலான போஸ்டர்களும், பதாகைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நடவடிக்கை விசமத்தனமானது என இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் (ஜூனியர் தொண்டமான்) சீறிப்பாய்கின்றார்.

இவற்றை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொலீஸ்மா அதிபரும், பிரதேசங்களுக்கு பொறுப்பான பிரதி பொலீஸ் மா அதிபர்களிடமும் அவர் முறைப்பாடுசெய்துள்ளார்.

மலையகத்தில் பல பாகங்களிலும் பெரிய அளவிலான இத்தகைய போஸ்டர்களும் பாதாதைகளும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், மலையகத் தமிழ்மக்கள் மத்தியில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்கப் போகிறது என்பதை இன்றுதான் உத்தியோக பூர்வமாக அறிவிக்கின்றது.

இத்தகைய நிலையில் இ.தொ.காவின் பெயரைக் களங்கப்படுத்தும் வகையிலும், மலையகத் தமிழரைத் திசை திருப்பும் திட்டத்தோடும் இவ்வாறான விசமத்தனமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனக் சீறிச் சினந்து ஆத்திரப்படுகின்றார் ஆறுமுகன் தொண்டமான்.

இ.தொ.காவின் ஸ்தாபகதலைவரின் பெயரையும், அவரது படங்களையும் ஒரு கட்சி தனது தேர்தல் பிரசாரங்களுக்கு முறையற்ற விதத்தில் பயன்படுத்தி இருப்பது அந்த தலைவரின் கௌரவத்தையே மாசுப்படுத்தும் செயலாகும்.

சீனியர் தொண்டமானின் படத்தையோ, கட்சியின் சின்னத்தையோ பயன்படுத்துவதற்கு பிரதமரோ அல்லது அவரது ஆதரவாளர்களோ எந்தவிதமான முன்அனுமதியையும் எமது கட்சித் தலைமையிடம் பெறவில்லை எனவும் இ.தொ.கா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இறாகலைப் பகுதியில் இவ்வாறான போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருப்பது இ.தொ. கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் கவன்த்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறான போஸ்டர்களையும், பதாகைகளையும் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி இறாகலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும், நுவரெலிய பிராந்திய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கும் ஆறுமுகன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனால், இவை இதுவரை அகற்றப்படவில்லை மாறாக மலையகத்தில் வேறு பிரதேசங்களினதும் இவ்வாறான பதாகைகளும், போஸ்டர்களும் புதிது புதிதாக முளைக்கத் தொடங்கியிருக்கின்றன. (க)

# பிரசாரத்துக்குப் பொலித்தீன் தடை; சட்டத்திருத்தம் கொண்டுவர முயற்சி

கொழும்பு, ஒக். 6

தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது பொலித்தீன் பாவனையைத் தடை செய்வதற்கான சட்டதிருத்தமொன்றைக் கொண்டு வருவது குறித்து சுற்றாடல்துறை அமைச்சு கவனஞ் செலுத்தி வருகின்றது.

தற்பொழுது அமுலிலுள்ள சட்டங்களைத் திருத்தி தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது பொலித்தீன் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கு சட்டம் கொண்டுவருவது குறித்து அமைச்சர் ஏ. எச். பௌசி கவனஞ்செலுத்தி வருகிறார் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பொலித்தீன் தடை குறித்த சட்டத்தைக் கொண்டுவருவது தொடர்பாக சட்டமா அதிபருடன் கலந்தாலோசிப்பதற்கும் அமைச்சர் திட்டமிட்டிருக்கிறார் எனவும் சுற்றாடல்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து அமைச்சர் ஏ. எச். எம்.பௌசி கருத்துத் தெரிவிக்கையில்:-

'' தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது பொலித்தீன் பாவனையை நிறுத்துமாறு எழுத்து மூலம் அனைத்து அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொண்ட போதிலும் அதற்கு வரவேற்கத்தக்க வகையில் பயனெதுவும் கிடைக்கவில்லை.

''மேலும் பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிடமும் ஐக்கிய தேசியக் கட்சியிடமும் இதுதொடர்பாக மீண்டும் வேண்டுகோள் விடுத்திருந்தோம் . எனினும் அதற்கும் பயனெதுவும் கிடைக்கவில்லை'' எனப் பௌசி தெரிவித்தார். (க-3)

# 2006ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் விவரம்!

நாடாளுமன்றத்தில் அரசினால் நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் குறித்த விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| புத்தசாசன | 490,260,000 |
| மின்வலுசக்தி | 10,476,291,000 |
| போக்குவரத்து | 779,000,000 |
| நெடுஞ்சாலைகள் | 36,930,890,000 |
| நிதி திட்டமிடல் | 52,791,754,000 |
| பாதுகாப்பு | 69,470,000,000 |
| கமத் தொழில் | 11,039,000,000 |
| முதலீட்டு ஊக்குவிப்பு | 706,100,000 |
| உயர் தொழில் நுட்பம் மற்றும் தேசிய தொழில் முயற்சி | 1,023,780,000 |
| அரசமைப்பு விவகாரம் தேசிய ஒருமைப்பாடு | 140,024,000 |
| வெளிநாட்டு அலுவல்கள் | 5,671,470,000 |
| துறைமுகங்கள், விமானசேவைகள் | 2,256,550,000 |
| கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,247, 000,000 |
| நகர அபிவிருத்தி நீர்வழங்கல் | 27,638,270,000 |
| வீடமைப்பு நிர்மாணக் கைத்தொழில் கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி | 1,568,747,000 |
| தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி | 981,283,000 |
| கடற்றொழில், கடல்வளங்கள் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் | 4,006,870,000 |
| மகளிர் தத்துவமளிப்பு சமூகநலனோன்புகை அமைச்சு | 5,918,718,000 |
| நிதி சட்ட மறுசீரமைப்பு | 5,636,360,000 |
| நீர்ப்பாசனம், மகாவலி மற்றும் ரஜரட்ட அபிவிருத்தி | 6,935,680,000 |
| சூழலியல் இயற்கை வளங்கள் | 3,331,901,000 |
| மாகாண சபைகள், உள்ளூராட்சி | 88,600,821,000 |
| சுகாதார நலத்துறை, போசனை, ஊவ வெல்லஸ்ஸ அபிவிருத்தி | 36,807,786,000 |
| காணி, சுதேச மருத்துவத்துறை | 4,090,245,000 |
| பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 26,868,900,000 |
| பெருந்தோட்ட கைத்தொழில் | 1,149,095,000 |
| பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 2,708,300,000 |
| அஞ்சல், தொலைத் தொடர்புகள், மலையக அபிவிருத்தி | 661,340,000 |
| சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் | 1,002,917,000 |
| சமுர்த்தி வறுமை ஒழிப்பு | 17,728,000,000 |
| கல்வி | 34,009,110,000 |
| கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை | 1,194754000 |
| திறன்கள் அபிவிருத்தி, வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி | 4,712,859,000 |
| தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் | 1,061,857,000 |
| பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் | 44,146,300,000 |
| தகவல் மற்றும் ஊடகத்துறை | 1,275,575,000 |
| நாடாளுமன்ற அலுவல்கள் | 144,125,000 |
| விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் | 1,231,750,000 |
| நிவாரணம் புனர்வாழ்வளிப்பு மற்றும் நல்லிணக்கம் | 12,512,000,000 |
| கமத் தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி இந்துசமய அலுவல்கள், கல்வி துணை மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி | 610,000,000 |
| வர்த்தக, வாணிய, நுகர்வோர் அலுவல்கள் | 523,438,000 |
| விஞ்ஞான தொழில்நுட்பவியல் | 1,735,900,000 |
| சுற்றுலாத்துறை | 234,200,000 |
| மத்திய, சிற்றளவு பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கிராமிய மனிதவள | 1,278,758,000 |
| புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி (வன்னி) | 470,200,000 |
| புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி (மட்டக்களப்பு) | 211,500,000 |
| புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி (திருகோணமலை) | 211,500,000 |
| முஸ்லிம், சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு | 167,770,000 |
| ரயில்வே | 12,900,000,000 |
| சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில்களுக்குத் துணைபுரியும் அமைச்சு | 33,600,000 |

## ஆசிரியர் சங்கத்தின் 48ஆவது மாநாடு அநுராதபுரத்தில்

யாழ்ப்பாணம்,ஒக்.6

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 48 ஆவது பேராளர் மாநாடு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் மாலை 4மணி வரை அநுராதபுரம் விவேகானந்த இந்து வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள விரும்புபவர்களை இன்று மாலை சங்க அலுவலகத்துக்கு வருமாறு சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளைச் செயலர் கேட்டுள்ளார். (3)

## சாரணிய வழிகாட்டுநருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சாரணிய வழிகாட்டுநர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சாரணிய ஆணையாளர் கேட்டுள்ளார். (3-202)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து 06.10.2005





HAPPY BIRTHDAY

கி.சஜிந்தன்

அராலி வடக்கைச் சேர்ந்த
கிருஷ்ணபிள்ளை - உதயநந்தினி தம்பதியினரின்
செல்வப் புதல்வன் கி.சஜிந்தன்
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.10.2005) வியாழக்கிழமை அம்மப்பாவின் இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

சஜிக்குட்டியை அன்புஅப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாஷார், பெரியம்மாமார், அன்ரி, அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், டோகாவில் வசிக்கும் மாமா, அத்தான்மார், சுவிஸில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா , அக்காமார்கள், சித்தப்பா, அன்ரி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

'உதயபவனம்',
அராலி வடக்கு, அராலி.

தகவல்:
அப்பா, அம்மா.

(த-45433)(22-16-45-42)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (06.10.2005) வியாழக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில்
கலைமாணிப் பட்டம்
B.A. (HONS) பெறும்
செல்வி சண்முகம் நாககுலவாணி
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம். - குடும்பத்தினர்.

(40828)(42-15-45)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (06.10.2005) வியாழக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில்
கலைமாணிப் பட்டம்
B.A. (HONS) பெறும்
செல்வி கந்தசாமி ரதிவதனி
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உடுப்பிட்டி. - நண்பர்கள்.

(40829)(42-15-45)



### வாழ்த்துக்கள்



திருவாளர்
பொ.பேரின்பநாதன்

எமது பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஒய்வு பெற்றுச் சென்ற எங்கள் அதிபர் அவர்களை ஆசிரியர் தின நன்நாளில் அவரது ஒய்வு காலங்களில் சகல சுக நலன்களும் பெற்று நீண்ட காலம் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை,
நீர்வேலி. (40784)(42-15-45) ஆசிரியர் கழகம்.



JTI மீண்டும் தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம்.

மத்திய கிழக்கு நாடுகளில், ஐரோப்பிய நாடுகளில் இலகுவான முறையில் தொழில் வாய்ப்பைப் பெறக்கூடிய முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

**RADIO, T.V AND VIDEO DECK REPAIRING**

சகல இன றேடியோ, ரி.வீ, டெக் மற்றும் எலற்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

**MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**

சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

**AIR CONDITIONING AND REFRIGERATION**

சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்ச ளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

**MOTOR CYCLE MECHANISM**

சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)

**HARD WARE ENGINEERING AND ELECTRONIC**

(காலம் 04 மாதங்கள்)

ஆரம்பம் :- 07.10.2005, 09.10.2005

O/L, A/L படித்த மாணவர்கள் அனுமதிக்கப்படுவார் மேலதிக விபரங்களுக்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**

இல. 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

Regd No 15251 T.P:- 021-222 3335



SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியூடான
**பயிற்சியும் பணி நியமனமும்**
**சனி, ஞாயிறு பிரிவு**









பணிநியமனம்: ஆங்கில ஆசிரியர், உள்நாட்டு, சர்வதேச செயற்பாடுகளில் இணையதள, மென்பொருள், கற்கைநெறி விருத்தியாக்கம் மற்றும் பொது நிர்வாகம்.

பயிற்சிக்காலம் : சனி, ஞாயிறுகளில் 9.00 - 3.00, 4 மாதங்கள்

கட்டணம் : ரூபா 12,000/- அனுமதி முதலில் வரும் 40 பேருக்கு மட்டும்

கல்வித்தகுதி : க.பொ.த உயர் தரத்தில் சித்தி (ஆங்கில பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை)

பயிற்சிக் காலத்தின்போதும் ஊதியம் வழங்கப்படும்

Phone
4591571
077 - 3068968

SAAMSTECH

841, Hospital Road, Jaffna. 233/4, Kasthuriyar Road, Jaffna. 198, Galle Road, Dehiwala

# வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீண்டும் பிரிக்க வேண்டுமாம்

## நாடாளுமன்றில் சட்டமூலம் கொண்டுவர பிக்கு எம்.பி. முயற்சி

கொழும்பு, ஒக்.6

வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீண்டும் பிரிக்க வேண்டும் என்று கோரும் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவர ஜாதிக ஹெல உறுமய எம்.பி. நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முயன்றார். ஆனால், சபாநாயகர் அந்த நடவடிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். அத்தகைய நடவடிக்கையை ஜனாதிபதி ஒருவரால் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் கூடியபோது ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களான வண. கொட்டபொல அமரகீர்த்தி தேரர் திருத்தச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு முயன்றார். அதற்கான முன்னறிவித்தலையும் அவர் சபையில் சமர்ப்பித்தார்.

அதாவது, முன்னர் தனித்தனியே இருந்த வடக்கு - கிழக்கு மாகாணங்கள், 1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட 522/99 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின்படி ஒரே மாகாணமாக இணைக்கப்பட்டன.

இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்து இரு மாகாணங்களையும் மீண்டும் தனித் தனியாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்து வண. கொட்டபொல அமரகீர்த்தி தேரர், அது குறித்த திருத்தச் சட்டமூலத்துக்கான முன்னறிவித்தலை வழங்கினார்.

1947ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க மக்கள் பாதுகாப்புச் சட்டத்திற்கு அமைய 1987ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலம் ஒன்றையும் தாம் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப் போகிறார் என்றும் தேரர் தெரிவித்தார்.

தேரரின் முயற்சியை சபாநாயகர் நிராகரித்தார். (க)

# இலங்கை வர்த்தக உடன்பாட்டால் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறையும்

## நிதி அமைச்சர் வெளியிடும் நம்பிக்கை

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள வர்த்தக உடன்படிக்கையின் மூலம் வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பையும் ஓரளவு குறைக்க முடியும் என நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை தெரிவித்தார்.




சுங்க கட்டளைகள் சட்டம், உற்பத்திவரி விசேட ஏற்பாடுகள், பெறுமதி சேர்வரி மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டம் என்பனவற்றில் எட்டுத் திருத்தங்களைச் செய்வதற்கான பிரேரணைகளை நிதி திட்டமிடல் அமைச்சரும் முதலீட்டு ஊக்குவிப்புகள் அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பித்தார்.

அவை தொடர்பாக அமைச்சர் சரத் அமுனுகம விளக்கம் அளித்துப்பேசும்போது குறிப்பிட்டதாவது:-

இலங்கை - பாக். வர்த்தக உடன்படிக்கை, இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவை அதிகரிப்பதோடு நமது நாட்டின் வெளிநாட்டு வருமானத்தையும் அதிகரிக்கும். பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு பல்வேறு வகையில் வரி விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. பல பொருள்களுக்கான வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. முதலீட்டாளர்களுக்கு ஐந்து வருட வரிவிலக்கும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனால், பாக். முதலீட்டாளர்களின் வருகை அதிகரிக்கும். இதன் மூலம் இலங்கையர்கள் தொழில் வாய்ப்புகளையும் பெறமுடியும். அண்மையில் பால்மா, எரிவாயு மற்றும் டீசலுக்கான 'வற்' வரிகள் நீக்கப்பட்டன. இதனால், அரச செலவினம் பெரிதும் அதிகரித்துள்ளது.

இதனை ஈடுசெய்யும் வகையில் ஆடம்பரப் பொருள்களுக்கான வரி 18 விதத்தில் இருந்து 20 வீதமாக அதிகரிக்கப்படும். இதன்படி சர்வதேச தொலைத்தொடர்பு முகவர் நிலையங்களிடமிருந்து மேலதிகக் கட்டணம் ஒன்றை அறவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இது வர்த்தக மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட குளிரூட்டப்பட்ட வாகனங்களை சாதாரண வாகனங்களாக மாற்றி அமைப்பதற்கு அறவிடப்பட்டு வந்த வரியை 20 வீதத்தில் இருந்து 6 சதவீதமாகக் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - எனவும் நிதி அமைச்சர் கூறினார்.'

இந்த எட்டு ஒழுங்கு விதிகளும் ஒன்றாக விவாதிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

(க)

# மகேஸ்வரன் சார்பில் கேள்வி கேட்க உரிமையில்லை; ஐ.தே.கவினருக்கு பெர்னாண்டோபுள்ளே சாட்டை!

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் சார்பில் கேள்விகளைக் கேட்பதற்கு மஹிந்த சமரசிங்கவுக்கு எந்தவிதமான யோக்கியதையும் இல்லை என்று ஆளும் கட்சிக் கொரடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் ஐ.தே.கவினரைச் சாடினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது. வழமைபோல் உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளித்தனர்.

பெரும்பாலான கேள்விகளுக்கு ஆளும்கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேதான் பதிலளித்தார்.

அப்போது கொழும்பு மாவட்ட ஐ.தே. க. எம்.பி. தியாகராஜா மகேஸ்வரனின் சார்பில் மஹிந்த சமரசிங்க கேள்வியைக் கேட்டார். உடனே ஆளும்கட்சிக் கொரடா தனது ஆட்சேபனையைக் கிளப்பினார்.

''மகேஸ்வரன் எம்.பி. வழமையாக நாடாளுமன்ற அமர்வுத்தினங்களில் சபைக்கு வராமல் இருப்பதில்லை. ஆனால், அவர் இன்று (நேற்றுமுன்தினம்) சபைக்கு வரவில்லை.

''மகேஸ்வரன் எம்.பியை ஐ.தே.கவில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிகின்றோம். ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகோத்தாவில் மகேஸ்வரனை அடைத்து வைத்திருப்பதாகவும் செய்திகள் அடிபடுகின்றன. அது உண்மையா?'' என மஹிந்த சமரசிங்கவிடம் கேள்வி எழுப்பிய அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே, '' மகேஸ்வரனின் சார்பில் கேள்வி எழுப்பும் யோக்கியதை ஐ.தே.க. உறுப்பினரான உங்களுக்கு இல்லை''- என்றும் சாடினார். அமைச்சரின் கேள்விக்கு நேரடியாக எந்தப் பதிலையும் கூறாத மஹிந்த சமரசிங்க, எதிர்க்கட்சிக் கொரடா என்ற வகையில் இதனைக் கேட்கிறேன் என மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே இருந்தார்.

மஹிந்த சமரசிங்கவிடமிருந்து நேரடியான பதில் ஏதும் கிடைக்காததால், அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே மகேஸ்வரனின் கேள்விக்குப் பதில் அளிக்க மூன்று வார கால அவகாசம் கேட்டுவிட்டு அமர்ந்துகொண்டார். (க)

# கமநல சேவை நிலையங்கள் ஊடாகத் தூவல் நீர்ப்பாசன இயந்திரங்கள்

வலி.தெற்கு,6

யாழ்.மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களுடாக விசாய நடவடிக்கைகளுக்கு தூவல் நீர்ப்பாசன இயந்திரங்கள் பொருத்திக்கொடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவற்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இவ்வாறு கமநல சேவை நிலையங்களூடாக நூறு தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள் இணைப்புச் செய்யப்படவுள்ளன.

முதற்கட்டமாக உரும்பிராய் - புத்தூர் கமநலசேவை நிலையப் பிரிவுகளில் 25 தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள் இணைப்புச் செய்யப்படவுள்ளன.

தூவல் நீர்ப்பாசனத் தொகுதி ஒவ்வொன்றுக்குமான செலவில் அரைப்பங்கான 15 ஆயிரம் ரூபாவை 15 தவணைகளில் விவசாயிகள் தவணைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என்றும்- மிகுதி 15 ஆயிரம் ரூபா பராமரிப்புச் செலவையும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என்றும் -

புத்தூர் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரன் தெரிவித்தார். (ஒ-152)

# மானிப்பாய் நூலகத்தில் வாசிப்பு மாதம் அனுஷ்டிப்பு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மானிப்பாய் பட்டின பொது நூலகம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதிவரை இரவு ஒன்பது மணி வரை இயங்கும் என்று வலி.தென்மேற்கு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பொதுமக்களிடமிருந்து நூல்களைச் சேகரித்தல், மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை - இப் பிரதேச சபையின் ஆனைக்கோட்டை பொது நூலகம் தினமும் இரவு ஒன்பது மணிவரை இம்மாதம் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-135)

# அச்சுவேலி மற்றும் ஆவரங்கால் பாடசாலைகளுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,ஒக்.6

அச்சுவேலி மகாவித்தியாலயம் மற்றும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கென தலா 30 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்ணான்டோ இந்த நிதியினை வழங்கியுள்ளார்.

அண்மையில் இரு பாடசாலைகளுக்கும் விஜயத்தை மேற்கொண்ட போது அங்குள்ள வசதியீனங்களை ஆளுநர் கேட்டறிந்தார்.

அதன் பின்னரே இந்தப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென நிதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரத்தினம் தெரிவித்தார். (ஒ-13)

# லயன்ஸ் ஆளுநருக்கு வரவேற்பு

வலி.தெற்கு,ஒக்.6

இணுவில், சுன்னாகம் பகுதிகளைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்களின் சார்பில் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன்.சரத் குணசேகரா, லேடி லயன், ஆன்.குணசேகரா ஆகியோருக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வரவேற்பு நடத்தப்பட்டது.

இணுவில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.இலகுநாதன், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டாக்டர் பேரின்பநாயகம் ஆகியோரின் இணைத் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இந் நிகழ்வின்போது கைதடியிலுள்ள முதியோர் இல்லத்தைச் சேர்ந்த ஐம்பது முதியவர்களுக்கு தலையணைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் உடுபுடைவைகள் என்பன வழங்கப்பட்டன. அத்துடன், இராமநாதன் கல்லூரி வளாகத்தில் பயனுள்ள மரக்கன்றுகள் பலவும் நடப்பட்டன. லயன் ரி.கைலாசநாதனின் அறிமுகஉரையும் இடம்பெற்றது.

லயன்ஸ் கழகங்களின் நிர்வாகிகள், உறுப்பினர் உட்படப் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ஒ-152)




### நவாலிப் பகுதியில் புழுதி விதைப்பு

நவாலி,ஒக்.6

நாவலி, ஆனைக்கோட்டைப் பகுதி விவசாயிகள் மழையை நம்பி தற்போது புழுதி விதைப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.

பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள மழைக்காகக் காத்திருந்த விவசாயிகள் விரைவில் மழை பெய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதை அறிந்து புழுதி விதைப்பினை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (ஒ-100)

# சிசு உட்பட ஐவரை விசர்நாய் கடித்தது

கைதடி,ஒக்.6

கைதடிப் பகுதியில் 9 மாத சிசு உட்பட 5பேர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகினர்.

கைதடிமத்தியைச் சேர்ந்த சண்முகநாதன் றதினா என்னும் ஒன்பது மாதக் குழந்தையே விசர்நாயினால் கடியுண்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

மேலும் அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் அனுராஜ் (வயது 16), சின்னராஜா கபிலன் (வயது 19) ஆகியோரும் கைதடி கள்ளிநகரைச் சேர்ந்த சின்னட்டி சண்முகரத்தினம் (வயது 26), ஜெகநாதன் மதுரிக்கா (வயது 12) ஆகியோரும் விசர் நாயினால் கடியுண்டனர்.

அண்மைக் காலமாக கைதடிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் பலவும் விசர் நோயினால் பீடிக்கப்பட்டு வருவதாகவும்-

அவற்றைக் கட்டுப்படுத்தி அழிக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொதுமக்கள் கோருகின்றனர். (ஒ-75)

### இளைஞரைத் தாக்கி உடைமைகள் அபகரிப்பு

வேலை முடிந்து இரவுவேளை வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத சிலர் தாக்கி விட்டு அவரது உடைமைகளை அபகரித்துச் சென்ற னர். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு கைதடி தென்கிழக்கில் இடம்பெற்றது.

பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து கைதடி கிழக்கில் வசித்துவருபவரான சந்தானகோபால் சயந்தன் (வயது 24) என்பவரே இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவராவார். (ஒ-75)

# 'எயிட்ஸ்' விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.6

சுகவாழ்வுக்கான பயணம் என்ற அமைப்பினரால் யாழ்.மாவட்டத்தில் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதிப் பங்களிப்புடனும் யாழ்.மாவட்ட பிரதி மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரனின் நெறிப்படுத்தலிலும் யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, தேசியக் கல்வியியல் கல்லூரி மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் முதற்கட்டமாக இந்தக் கருத்தரங்குகளை நடத்தத் திட்டமிடப்பட்டது.

இதில் பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான கருத்தரங்கு தற்போது நடைபெற்றுவருகிறது.

(ஒ-410)

### வாராந்த நிகழ்வு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரம் தோறும் நடத்தப்பட்டுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் தலைப்பில் இளைப்பாறிய ஆசிரியர் மா.பாலேந்திரம் சொற்பொழிவாற்றுவார். (ஒ-173)

# மழைவேண்டி கொடும்பாவி எரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.6

பெரும்போக நெற்செய்கைக்கு மழை வேண்டி சம்பிரதாயச் சடங்காக நவாலியில் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

செப்ரெம்பர் மாத இறுதிப் பகுதியில் பெய்யும் மழையை நம்பியே விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்கின்றனர்.

ஆனால், இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் கடந்தும் மழை பெய்வது தாமதமாகியுள்ளது. இதனால் நவாலிப் பகுதியில் பொது மக்கள் மழைவேண்டி பிரார்த்தித்துக் கொடும்பாவி எரித்தனர்.

நவாலி வடக்கு பெத்த நாச்சியார் ஆலய நிர்வாகி ஐயாத்துரை உருத்திரகுமார் தலைமையில் கொடும்பாவி எரிப்பு பிரார்த்தனை இடம்பெற்றது.

மக்களின் பாவங்களை உருவகப்படுத்தும் கொடும்பாவியை வீதிகள் வழியே ஒப்பாரிவைத்து இழுத்துச் சென்ற மக்கள் நவாலி ஆரியம்பிட்டி மயானத்தில் வைத்து அதனை எரித்தனர்.

(ஒ-100-185)

## பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்



**திரு. பா.முகுந்தன் (B.A. HONS)**

யாழ்.பல்கலைக்கழகத்தின் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் பொருளியல் சிறப்புப் பட்டத்தைப் பெறுவதோடு, பல பட்டங்கள் பெற்று வாழ்கவென வாழ்த்துகிறேன்.

(40853)(26-45-15-24) **- நண்பன்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இளவாலை ஈன்ற எமது கல்வி நிலைய ஆசிரியர்

**கதிர்காமத்தம்பி நவரூபன்.**

இன்று (06.10.2005) யாழ். பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானமாணி (B.Sc. in Agri.) பட்டம் பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர் பதவியும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

காந்தி கல்வி நிலைய கல்விச் சமூகம்,
இளவாலை.

(40868)(26-45-15-24)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த
செல்வன்

**சந்திரகுமார் கஜமுகன் (B.A.)**

இன்று (06.10.2005) வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெறுவதையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். (40864)(32-45-15-24) **- நண்பர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வன் வைகுந்தராஜா சசிகாந்த் *(ரதன்)***
(B.Com. (Hons) Acc. Special)



இன்று (06-10-2005)
**வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வணிகமாணி (கணக்கியல் சிறப்பு) பட்டம் பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.**

திருநெல்வேலி
(மண்டைதீவு-08). (40859)(46-45-15-24)

திரு.திருமதி நா.சிவகுருநாதன்
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி

**சண்முகலிங்கம் மதிவதனி**

(ஆசிரியை, St.Antony School Colombo)

இன்று (06-10-2005) யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.F.A. நுண்கலைமாணி பட்டம் பெறும் இவர் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
Mr & Mrs. துரைராஜசிங்கம் குடும்பம்,
Mr & Mrs. தர்மகுலசிங்கம் குடும்பம்,
Mr & Mrs. பாக்கியராசா குடும்பம்,
Mr & Mrs. சுப்பிரமணியம் குடும்பம்,
Mr & Mrs. நித்தியானந்தராசா குடும்பம் (Norway),
Mr & Mrs. கிருஷ்ணசாமி குடும்பம் (Colombo),
Mr & Mrs. தவலிங்கம் குடும்பம் (Norway).

சங்கத்தானை,
சாவகச்சேரி.
(40863)(26-45-15-24)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் இலட்சியத்துடன் தன்னலங் கருதாப் பணி செய்து வரும்

**சைவபூஷணம் வல்லிபுரம் கந்தசாமி**

**அவர்களுக்கு**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ **கலாநிதிப்பட்டம்** வழங்கிக் கௌரவிக்கும் இவ்வேளை எங்கள் மனம்நிறைந்த பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் செலுத்துகின்றோம்.

*த. சண்முகலிங்கம்*
*சைவப்புலவர் சு. செல்லத்துரை*
*இ. குகதாசன்*
*இ. சங்கர்*

*430, காங்கேசந்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ். பிரதம தபாலக வளாகத்தின் வாணிவிழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின் இறுதிநாள் அன்று யாழ். பிரதம தபாலக மேல்மாடியில் வாணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. அன்றையதினம் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஒ-12)

***

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நவராத்திரி விழா கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

தினமும் முற்பகல் 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து பூசைகள் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 4 மணிக்கு சாயரட்சைப் பூசையுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து ஸ்ரீசக்கர பூசை, வசந்தமண்டபப் பூசை, கூட்டு வழிபாடு, அர்த்தஜாமப் பூசை என்பன இடம்பெறும்.

விஜயதசமிவிழா எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும். அன்றையதினம் திருவீதி உலா, வாழை வெட்டல், வித்தியாரம்பம் என்பன இடம்பெறும்.

(ஒ-204)

***

சுழிபுரம்,ஒக்.6

சித்தன்கேணி சுப்றா கல்வி நிறுவனத்தின் ஆசிரியர் தின விழாவும் வாணி விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

என்.ஜனார்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், மூத்த தமிழ்க் குருமணி கலாநிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொள்வார். (ஒ-28-203)

### ஆய்வுகூட அலுவலர் இன்றிச் சிரமம்

சங்கானை சுற்றயல் கூறு அரசினர் வைத்தியசாலையில் ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் இல்லாததால் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசோதனை மட்டுமே இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் ஒருவரை இவ் வைத்தியசாலைக்கு நியமித்துத் தருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-135)

## பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்



**செல்வி சு.லோகதர்சினி B.A. (Hons)**

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் இந்துநாகரிக சிறப்புப் பட்டம் பெறுவதோடு, வாழ்வில் சகல சௌபாக்கியமும் பெற வாழ்த்துகிறேன்.

(40852)(26-45-15-24) **சகோதரன்.**

# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

**தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

**01. பணிநிலை:- அலுவலர் (பயிலுநர்)**

**தகைமைகள்:-** ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தொழில் நிர்வாகமாணி (BBA) / வணிகமாணி (B.Com.) / விஞ்ஞானமாணி (B.Sc.)பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் வங்கியியல் பட்டப்படிப்பை (Diploma in Banking) நிறைவுசெய்தவராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 4,500 + 6,000**

**அகவை எல்லை:-** 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

**02. பணிநிலை:- கணக்காய்வாளர் (பயிலுநர்)**

**தகைமைகள்:-** ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா (HNDA) கற்கை நெறியில் / உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) கற்கை நெறியில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- 3,500 + 6,000**

**அகவை எல்லை:-** 32வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

**03. பணிநிலை:- உத்தியோக உதவியாளர் தரம் - 03**

**தகைமைகள்:-** க.பொ.த (சாதாரண தர) தேர்வில் கணிதம் 42/ கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:-** $\frac{3,670 - 5,070}{70x20} + 6,000$

**அகவை எல்லை:-** 19 - 25 ஆண்டுகள்

**வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில் "*ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - கணக்காய்வாளர் (பயிலுநர்), ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - உத்தியோக உதவியாளர், தரம் 03*" எனக் குறிப்பிடப்பட்டு 2005-10-31ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேற்கூறிய விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:-
- முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
- நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளைப் பதிவுத் தபாலில் (**மனித வள மேலாளர், மனிதவளப் பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், இரத்தினம் மேல் மாடி, யாழ். சாலை, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி/44450) (24-45-15)

# சைவசமயப் பாடப் பரீட்சை

காரைநகர்,ஒக்.6

காரைநகர் தங்கோடை இந்து இளைஞர் மன்றம் நடத்தும் சைவ சமய பாடப் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நவராத்திரி விழாவை முன்னிட்டு காரைநகர் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் இப்பரீட்சையில் தரம் மூன்று முதல் தரம் 11 வரையான மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்றும் - இதில் சிறந்த பெறுபேற்றைப் பெறும் மாணவர்களுக்கு எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை இந்து இளைஞர் மன்றத்தினால் நடத்தப்படவுள்ள நவராத்திரி விழாவில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று இந்து இளைஞர் மன்றத் தலைவர் எஸ்.சுரேஸ்குமார் தெரிவித்தார். (எ-73)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

06.10.2005, 07.10.2005
ஆகிய தினங்களில் நடைபெறும்
யாழ். பல்கலைக்கழகப்
பொதுப்பட்டமளிப்பு விழாவில்
பட்டம் பெறும் எமது சனசமூக
நிலைய அங்கத்தவர்களான

**செல்வி அஜந்தா குணசேகரம்**
(கலைமாணி)
**திரு. சிவசம்பு மதியழகன்**
(பட்டப்பின் கல்வி டிப்ளோமா)

ஆகியோரைப் பாராட்டி கல்வியில் மேன்மேலும் உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

**வளர்மதி சனசமூக நிலையம்,**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(40901) (54-



## பாராட்டி வாழ்த்துகிறோம்



நாவற்குழியூர் நாகரத்தின ஐயர்
கலாதர சர்மா (J.P.)
அவர்கள் (06.10.2005) இன்று
சிறப்பு கலைமாணி (B.A. (Hons)
பட்டத்தினை யாழ். பல்கலைக்கழகத்தில்
பெறுவதை இட்டு அவரை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
சு. பாஸ்கரன் ஆச்சாரியார்,
479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:- 021 - 2223515
(40905) (12-18)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்பு சிந்தையுடன் அயராது உழைத்து வரலாற்று நாயகர்களாக விளங்கும்

அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியமணிகள்

அனைவரையும் இன்றைய ஆசிரிய தினத்தில் சேவை சிறக்கவும் வாழ்வு மலரவும் உளங்கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்கள்,
யாழ். இந்துஆரம்ப பாடசாலை பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(சி-45456) (54-12-18)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 719 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 04-10-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4788818-4804909 | |

வெற்றி இலக்கங்கள்
**06 14 21 29**

லக்கினம் கன்னி

ஜக்பொட் பரிசு
ரூபா. 10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 17,99,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,58,069 | 10/- | 35,80,690/- |
| 2.இலக்கங்கள் | 32,838 | 20/- | 6,56,760/- |
| 1.இல லக்கினம் | 32,505 | 30/- | 9,75,150/- |
| 2.இல லக்கினம் | 2,966 | 100/- | 2,96,600/- |
| 3.இலக்கங்கள் | 881 | 500/- | 4,40,500/- |
| 3.இல லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 67,49,700/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 78,01,950/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,01,950/- தொடர் இல. 5740555 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 4793076-3-95 |
| ஹம்பாந்தோட்டை | 4792506-6-32 |
| குருநாகல் | 4804121-0-88 |
| நுவரெலியா | 4788882-0-89 |
| பதுளை | 4791139-2-20 |


## மந்துவிலில் கைகலப்பு எட்டுப் பேர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

இரு குழுக்களிடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட எட்டுப்பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மந்துவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளவர்களில் அநேகர் வாள்வெட்டுக்கு இலக்காகித் தலையிலும் கன்களிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (எ-13)

## ஆசிரியர் தின விழாக்கள்

யாழ்.சோமசுந்தரம் பாலர் பாடசாலை சிறார்களின் ஆசிரியர்தின விழாநிகழ்வு இன்று மாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-51)

* * *

மண்டைதீவு,ஒக்.6

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று முற்பகல் 11.30 மணிக்கு ஆசிரியர் தின விழா நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் தீவக வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பௌஸ்டா தேவி அரசரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-88)

* * *

யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.(எ)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.6

வலி.மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய சங்கானைப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர் தின விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. (எ-202)


**படிவம்**
களனிப் பல்கலைக்கழக கல்வி யாண்டு 2005 / 2006 அநுமதிக்கான ( B.Sc Management & Information Technology Degree programme) தகைமைகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
முடிவுத்திகதி:19.10.2005
Bharathi Pathippakam, 430, K.K.S. Road, Jaffna.



**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30,
(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)



**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30,
(சி-43363)



**மனோகரா** யாழ்ப்பாணம்
இளைய தமிழன் ஸ்ரீகாந் நடித்த
**ஒருநாள் ஒருகனவு**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30,
அடுத்த வெளியீடு 7. 10. 2005 முதல்
பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக மண்டக...** இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
(சி-44110)



**நாகம்ஸ்** சினிமா - சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை**
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30,



## இன்றும் நாளையும் பட்டம் பெறும் யாழ்.பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

இந்த இனிய நிறைவு நன் நாளை என்றும் உங்கள் நீங்காத நினைவில் நிலைநிறுத்துவதற்கு தேவையான அனைத்து புகைப் படங்களுக்கும்

* நூற்றாண்டு காலம் பாதுகாத்திட Metalic தாளில் பெரிய அளவுகளில் உங்கள் தேவைக்கேற்ப பிரதியாக்கம் செய்து தரப்படும்.
* உங்கள் புகைப்படங்களை பல்லாண்டு காலம் அழியாது பாதுகாத்திட Duro Guard முறையில் Frame செய்து வேண்டிய அளவுகளில் தரப்படும்.

இந்த இனிய நன்நாளில் உங்கள் பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்திசெய்ய ஆவலுடன் காத்திருக்கின்றோம்.

அனுபவம், சிறந்த தொழில்நுட்பம், துரித சேவை
**கொனிக்கா ஸ்ரூடியோ**
இல.14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
பெருமாள் கோயில் அருகில்
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 -3493, Fax: 021 222 8333
(40907)



## வாழ்த்துகிறோம்

எமது கல்லூரி அதிபர்
**திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம்**

அவர்கள் மாவட்ட ரீதியில் சிறந்த அதிபராக தெரிவுசெய்யப்பட்டமையிட்டு பெருமையடைவதோடு மேலும் அவரது சேவை சிறப்புடன் தொடரவும் மென்மேலும் பல சிறப்புகள் பெறவும் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் தினமாகிய இன்று ஆசிரியர் சேவையில் எமது கல்லூரிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய, சேவையாற்றிக்கொண்டிருக்கும் ஆசிரியர்களை மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவிகள் சங்கம்,
வேம்படி மகளிர் கல்லூரி.
(40906)(22-12-18)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எம்மை வழிப்படுத்தி எம் வாழ்விற்கு ஒளியூட்டிய ஆசிரியர்களுக்கு இவ்வாசிரிய தினத்தில் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யாழ்/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
(40910)(12-18)



## வாழ்த்துகின்றோம்

இன்று யாழ். பல்கலைக்கழகத்தில்
பட்டம் பெறும்
**திருமதி**
**சசிகுமாரசர்மா ஸ்ரீகமலேஸ்வரி**
**B.A(Hons)**
(வரலாற்றுச் சிறப்புக் கலை)
அவர்களை வாழ்த்திப்
பாராட்டுகின்றோம்.

ந.கீர்த்தனா,
ந.ஷோபனா.
(40907) (22-18-12)



## ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன

காலம் : 12.10.2005 புதன்கிழமை
பி.ப. 4 மணிக்கு
இடம் : அன்பொளி கல்வியகம்.
நீராவியடி பிள்ளையார் கோயில் பின் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: பதிவுகளை 07.10.2005 வெள்ளிக்கிழமை தொடக்கம் தினமும் பி.ப. 4.00 - 6.00 மணி வரை மேற்கொள்ளவும்.

- இயக்குநர்.
(40899) (22-18-12)

# ஒக்டோபர் 6 ஆசிரியர் தினம்




திரு. வே. சுந்தரதாஸ் திரு. வீ. பொன்னுத்துரை
(முன்னாள் அதிபர்கள் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)



மறைந்தும் - என்னுள்
இருந்து வாழும்
ஆசிரியத் தெய்வங்களை
எந்நாளும் -
நேசத்துடன் நினைக்கின்றேன்.
மானிப்பூர் ரட்னேஸ்

திருமதி. கதிர்காமு குணமணி
(முதலாசிரியர் - அம்மா)

## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

உலக ஆசிரியர் தினமாகிய இன்று (06-10-2005) வியாழக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபரையும் ஆசிரியர்களையும் மற்றும் ஆசிரியர் சமூகத்தினரையும் மனமுவந்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் சிறந்த அதிபர்களில் ஒருவராக எமது பாடசாலை அதிபர் தெரிவு செய்யப்பட்டுள்ளமையையிட்டுப் பெருமை அடைவதோடு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(40890)(26-45)


# MEDICINE IN RUSSIA

SMOLENSK STATE MEDICAL ACADEMY
**DOCTOR OF MEDICINE (MD)**
MAIN SUBJECTS IN ENGLISH
*Internationally Recognized, Including British, Srilanka Medical Council and W.H.O*
*2000 US $ Per annum (6 Years)*

குறைந்த கட்டணத்தில் கற்பதற்கும், A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கும் அரிய சந்தர்ப்பம்

Admission, மற்றும் மேலதிக தகவல்களை சிரேஷ்ட மருத்துவ மாணவர் மூலம் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்;.

T.THULASY 0776147339
SMOLENSK FRIENDSHIP MEDICAL ASSOCIATE

672 KKS ROAD
Nachchimarkovilady
Jffna 021 - 2222536.

NO.33, Rudra Mawatha,
Wellawtta

**தமிழ் மாணவர்கட்கு சிறந்த வாய்ப்பு**
*குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கே அனுமதி*
(40876)(46-


## சாவகச்சேரியில் லயன்ஸ் கழக செயலகம் திறப்பு

தென்மராட்சி,ஒக்.6

சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலகம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப் பட்டது.

சர்வதேச லயன்ஸ்கழக மாவட்ட ஆளுநர் லயன் சரத்குணசேகரா இச் செயலகப் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து செயலகத்தைத் திறந்து வைத்தார்.

சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலையத் திற்கு அருகில் உள்ள கட்டடமொன்றில் இச் செயலகம் இயங்கிவருகிறது.

கழகத் தலைவர் லயன். சி.சிவபால சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாண வர்களுக்குப் புலமைப் பரிசில் நிதி வழங் கப்பட்டது.

கழகத்தினால் மாணவர்களுக்கு மாதாந் தம் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதிக்கு பலர் இந்நிகழ்வில் நிதி உதவி வழங்கினர்.

(ஒ-117)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
T.P.:- 021-222 8250,0777 222422

புதிய பிரிவுகள் ஆரம்பம்.....
Diploma in Computerized Accounting
Accpac + Quick Books Pro + MYOB
ஆரம்பம்:- 08/10/2005 09/10/2005 09.30-11.30
புதிய அறிமுகம் Tally

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
O/L, ஆங்கில வினாவிடை வகுப்பு 2 ஆவது பிரிவு 13-10-2005, 7.30 a.m. By: விக்னேஸ்வரன் ஆச்சாரி பிளாக்வீதி, சங்கானை. ' THE ROYAL IS THE BEST'
(40851)(26-45)

## வேலை ஆள் தேவை

1. சிட்டை எழுதுநர்
2. விற்பனையாளர்

மின்சார, அழகு சாதனப் பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ள ஆண்கள் (வயது 18-40) யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் உடன் நேரில் வரவும்.

**யாழ்ரன் மல்ரி சென்ரர்**
இல.48, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6330
(சி/45448)(24-26-45)

National Language Research Centre
தேசிய மொழி ஆய்வு மையத்தின்

## ஆங்கிலம்

இலவச தொலைக்கல்வி பாடநெறி
10 வயதுமுதல் 55 வயதுவரை யாரும் சுயவிபரக்கோவையை அனுப்பி விண்ணப்பிக்கலாம்

**NLRC**
198, Galle Road,
Sampath Bank 1st Flr, Dehiwala


## பாராட்டி வாழ்த்துகிறோம்



இன்று 06-10-2005 இல் நடைபெறும் யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் தமிழ்சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெறும் பண்ணாகம்

**அரிச்சந்திரன் முருகதாசன்**
(B.A. (Hons) Tam. Spe.) அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மேலும் சிறப்புப் பெற்று வாழ வாழ்த்தும்,

திரு.பண்டிதர் ம.இராசதுரை குடும்பம் (பிரசித்த நொத்தாரிசு),
திரு.த.துரைசிங்கம் குடும்பம் (பொறியியலாளர்),
திரு.அ.சுந்தரன் குடும்பம் (ஆசிரியர்).

(40887)(26-24-45-19)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



**ஜெயக்கொடி சுயேந்திரன்**

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (06-10-2005) வியாழக்கிழமை பொதுக்கலைமாணி B.A. பட்டம் பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகிறோம்.

இலகடி, உடுப்பிட்டி.

**மைத்துனர்கள்:**
சி.ஜெயசீலன், சி.மாசிலன்,
இ.வசீகரன், ம.நிரேஸ்.

(40882)(24-26-19-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று 06.10.2005 இல் நடைபெறும் யாழ்.பல் கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட் டம் பெறும் சுழிபுரம் குடியிருப்பு

**மனஸ்வினி இராதாகிருஷ்ண குருக்கள்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மேலும் சிறப்புப் பெற்று வாழ அன்புடன் ஆசீர்வதிக்கும்.

அன்பு மாமா, அத்தை,
பிரம்மஸ்ரீ ச.சோமஸ்கந்த குருக்கள் தம்பதிகள்.
பொன்னாலை.

(40881)(26-19-45)

## மனம் மகிழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**க.பொ.த. (உ/த) பரீட்சை - 2005**

**செல்வி ராதிகா சிவதாசன்**
(வர்த்தகம்) 3A - மாவட்டநிலை - 4
செல்வி கஜேந்தினி இராஜரத்தினம் (கலை) 2A,B
செல்வி சுஜித்தா வரதராசா (கலை) 2A, C

இவர்களுடன் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்ற ஏனைய மாணவர்களையும்

**தேசியமட்டப் போட்டி - 2005**

சேக்கிழார் விழா (பண்ணிசைப்போட்டி) - செல்வி வாசுகி கிருஷ்ணன் - முதலாம் இடம்

உடற்பயிற்சி - குழுவினரையும்

சட்டி எறிதல் - செல்வி கீதாஞ்சலி அமிர்தலிங்கம்

அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களின் உயர்விற்கு உழைத்த எமது அதிபர், ஆசிரியர் குழாத்தையும் நன்றியுடன் பாராட் டுகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(40883)(32-26-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிறப்புக் கலைமாணி (வரலாறு) பட்டத்தினைப் பெறும்

**நாகநாதன் வரலெட்சுமி**

கரம்பொன் மேற்கு, பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை அவர்களை வாழ்த்துகின் றோம்.

வாழ்த்துவோர்:
**நண்பர்.**

(40855)(46-26-45)


# YOGI'S EXHIBITION CAKES AND SUGAR CRAFT

## கேக் அலங்காரக் கண்காட்சி

யாழ்.பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் ஆதரவில்
எமது அக்கடமி மாணவிகள் வழங்கும் கேக், மாச்சினி மலர்
அலங்காரக் கண்காட்சி

இடம்: 75 ,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

காலம் : 6-9ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து இரவு 7மணிவரை.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
**சுப்பலோ வீடியோ ஓடியோ & டிஜிற்றல் கலர் லாப்**

149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2082

198/5 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2435

(40526)(46-19-15)


# மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்





நற்குணராஜா ரமணன் B.F.A
வைகுந்தராஜா சசிகரந் B.Com (Hons), Acc.Special
இராசரத்தினம் பரணிகரன் B.A (Hons)

இன்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்
பட்டம்பெறும் இவர்களை பாராட்டுவதுடன்
மேலும் பல பட்டங்கள் பெற எமது
மனமார வாழ்த்துக்கள்

No.29.காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குழி, (மண்டைதீவு).

த.தியாகலிங்கம் குடும்பத்தினர்.



இளையோர் செயற்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் 13,15 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கிளிநொச்சியில் நடத்தப்பட்டது. இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இரு அணியினரும் விளையாடுவதையும் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# நல்லூர் கோட்டப் பாடசாலைகளின் ஆட்டங்கள் சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

12 வயதுப் பிரிவு

- முத்துத்தம்பி ம.வி. எதிர் யாழ். இந்துக் கல்லூரி.
- பெரியபுலம் ம.வி. எதிர் முத்துத்தம்பி ம.வி.
- பெரியபுலம் ம.வி. எதிர் யாழ். இந்துக் கல்லூரி.

14 வயதுப் பிரிவு

- செங்குந்த இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி.
- யாழ். இந்துக் கல்லூரி எதிர் கனகரட்ணம் ம.ம.வி.
- செங்குந்த இந்துக் கல்லூரி எதிர் முத்துத்தம்பி ம.வி.
- கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் முத்துத்தம்பி ம.வி. (3-190)

# சக்தியின் கிரிக்கெட் ஆட்டம் உதயதாரகை சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஒக்.6

சக்தி எவ்.எம். தனது 7ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் நடத்திய மாபெரும் மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் உடுப்பிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகம் சம்பியன் ஆகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதாரகை விளையாட்டுக்கழக அணி 5 ஓவர்கள் நிறைவில் 4விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது.

சுஜீவன் 15 ஓட்டங்களையும் ரமேஸ் 15 ஓட்டங்களையும் ஜீவகன் 11 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ரஜீவன், காவஸ்கர், கஜேந்திரா, குகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற ஓட்ட இலக்கினைப் பெறுவதற்காகப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 3 விக்கெட்டுக்களை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது.

கஜேந்திரன் 28 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

கோபிநாத் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதன் மூலம் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டியில் விளையாடுவதற்கு ஆனைக்கோட்டை உதயதாரகை விளையாட்டுக்கழக அணி தகுதிபெற்றது. (3-190)

# கோப்பாய் கோட்ட உதைபந்தாட்டம்: அச்செழு சைவப்பிரகாசா சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.6

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற 12 வயதிற்கு உட்பட்டோருக்கான விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அணி வெற்றிபெற்றது.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராசா மகாவித்தியாலய அணி மோதியது.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலய அணியை எதிர்த்து விளையாடிய ஆவரங்கால் நடராசா மகாவித்தியாலய அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலய அணியை எதிர்த்துக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணி மோதியது.

கோப்பாய் மகாவித்தியாலய அணி எதிர்த்து விளையாடிய கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு மூன்றாவது இடத்தினைத் தனதாக்கிக்கொண்டது.

இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக ஏ.எவ். செபமாலைமுத்து, எஸ்.சண்தயாளன், ப.பாபு ஆகியோர் கடமையாற்றினர். (3-190)

# ஆசிரிய தினப் போட்டியில் வெற்றியீட்டியோர்

யாழ்ப்பாணம்,ஒக்.6

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக்கழகம் 'டில்கோ கொலிடே இன்'னின் ஆதரவுடன் ஆசிரியர்களுக்கிடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**கரம்**

ஆண்கள்: ஒற்றையர் ஆட்டம் - ஜே.மோகன், பி.வல்லாகன்.

பெண்கள்: ஒற்றையர் ஆட்டம் - எஸ்.விஜயரட்ணம், எஸ்.மதிவதனி.

ஆண்கள்: இரட்டையர் ஆட்டம் - எம்.ஜே.பெனிஸ்டஸ், ஜே.மோகன், எஸ்.தேவநாயகம், எஸ்.நந்தகுமார்.

பெண்கள்: இரட்டையர் ஆட்டம் - எஸ்.விஜயரட்ணம், பி.திருக்குமார், பி.தனபாலன், எஸ்.சிவாஜினி.

கலப்பு இரட்டையர் ஆட்டம் - எம்.ஜே.பெனிஸ்டஸ், எஸ்.விஜயரட்ணம், ஜே.மோகன், பி.தனபாலன்.

**சதுரங்கம்**

ஆண்கள்- ஜே.மோகன், பி.உல்லாசன், எஸ்.லிங்கசீலன், எஸ்.யோகசெல்வம்.

பெண்கள்: எல்.ஜே.சதீஸ்குமார், பி.யூக்கிறிஸ்ரின், திருமதி பி.கேதீஸ்வரன்.

**மேசைப்பந்தாட்டம்**

ஆண்கள் - ஒற்றையர் ஆட்டம் - ரி.ஜே.ஆர்.கிங்சிலி, எம்.ஜே.பெனிஸ்டஸ்.

பெண்கள்: ஒற்றையர் ஆட்டம் - ரி.திலகவதி, எஸ்.சிவாஜினி.

ஆண்கள்: இரட்டையர் ஆட்டம் - எம்.டி.தம்பிராஜ, ரி.ஆர்.கிங்சிலி.

எஸ்.விக்கினகுருபரன், எம்.ஜே.பெனிஸ்டஸ்.

**பட்மின்ரன்**

ஆண்கள்- ஒற்றையர் ஆட்டம் - ஜே.மோகன், ரி.ஆர்.கிங்சிலி.

பெண்கள்: ஒற்றையர் ஆட்டம்- எஸ்.விஜயரட்ணம், பி.தனபாலன்.

ஆண்கள்: இரட்டையர் ஆட்டம்- ரி.ஆர்.கிங்சிலி, ஆர்.கேதீஸ்வரன், எம்.விக்னகுருபரன், எஸ்.நந்தகுமார்.

கலப்பு இரட்டையர் ஆட்டம்- ஜே.மோகன், எஸ்.விஜயரட்ணம், எம்.விக்னகுருபரன், பி.தனபாலன். (3-190)

# பாடசாலைகள் கிரிக்கெட்

## கொக்குவில் இந்து - சென்.பற்றிக்ஸ் மோதல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் அணி 164 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

யஸ்ரின் 50 ஓட்டங்களையும் ஜெபஸ்சன் 22 ஓட்டங்களையும் கவாஸ்கர் 19 ஓட்டங்களையும் தருண் 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சயீத் 29 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் ஆதித்தன் 22 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் சதுர்சன் 32 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 77 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆதவன், ஆதித்தன் முறையே 21, 18 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

டிலக்சன் 23 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் ஜெபஸ்சன் 20 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் சிறிஸ்ரன் எதுவித ஓட்டங்களையும் கொடுக்காமல் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 29 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்தது.

சதுர்சன் ஆட்டம் இழக்காமல் 13 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

டிலக்சன் 11 ஓட்டங்கள் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (3-190)

## விக்னேஸ்வராவை வென்றது சென்றல்

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரிக்கும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி 40 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

விதர்சன் ஏழு ஓட்டங்களையும் கபில்ராஜ் ஆறு ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

விதார்சன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் அனேநிதர்சன் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும் கரிஸ் 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் யெறிக் துசாந்த் 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 212 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்தது.

நிலோயன் 2 ஓட்டங்களையும் யதுஸ்ரன் 31 ஓட்டங்களையும் எட்வேட் எடின் 18 ஓட்டங்களையும் யெறிக்துசாந்த் 41 ஓட்டங்களையும் அனேநிதர்சன் ஆட்டம் இழக் காமல் 66 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

அனுராதன் 57 ஓட்டங்களைக்கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் சஜீவன் 44 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிலக்சன் 38 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி 90 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அனுராதன் 26 ஓட்டங்களையும் நிசான் 19 ஓட்டங்களையும் கபிலராஜ் 19 ஓட்டங்களையும் நிரேயன் 7 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

அனேநிதர்சன் 15 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் யதுர்ஸ்கன் 15 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் கோகுலன் 13 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும் கரீஸ் 7 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

யாழ். மத்திய கல்லூரி அணி ஒரு இன்னிங்ஸில் 82 ஓட்டங்களினால் வெற்றிபெற் றது. (3-190)

## ஹாட்லியை இன்னிங்ஸால் வென்றது மகாஜனா

யாழ்ப்பாணம்,ஒக்.6

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை இன்னிங்ஸால் வெற்றிகொண்டுள்ளது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 38 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

நிசாந்தன், தனஞ்செயன் ஆகியோர் முறையே 13,9 ஆட்டங்களை ஆகக்கூடிய ஆட்டங்களாகப் பெற்றனர்.

வைகுந்தன், கோகுலன் ஆகியோர் முறையே 7,3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி ஆறு விக்கெட்டுக்களை இழப்பதற்கு 167 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

தர்பித்தன், யதுகுலன், கோகுலன், கபிலன் ஆகியோர் முறையே 50,29,17,17 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

நிசாந்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 57 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஐங்கரன், பிரணவன் ஆகியோர் முறையே 16, 13 ஓட்டங்களை ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றனர்.

கோகுலன், டிலக்ஷன் ஆகியோர் முறையே 6,3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.(3-86)

## கல்வி அபிவிருத்திச் சங்கத்துக்கு நிதி

வலி.தென்மேற்கு,ஒக்.6

மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத்திற்கு கணனிக்கான "அச்சுக்கருவி" ஒன்றை கொள்வனவு செய்வதற்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் 25ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத் தலைவர் வி.சிற்றம்பலம் இத்தகவலைத் தெரிவித்தார். (ஒ-135)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (06-10-2005) வியாழக்கிழமை யாழ்.பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறும்.

**திருமதி S.சிவகுமார்**

(B.A.HONS)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்பு டன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாதரவத்தை. (40840)(26-19-34) **நண்பர்கள்.**


## வைத்தியசாலை மின் இணைப்புக்கு ரூபா 40 ஆயிரம் நிதி ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு,ஒக்.6

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் மின்சார இணைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்த நிதி ஒதுக்கீடு பற்றி மேற்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிக்கும் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவருக்கும் ந.ரவிராஜ் எம்.பி.கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (ஒ-135)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப்பட்டம் பெறும்

**சோமாஸ்கந்த குருக்கள் கணேசராஜா (B.A.)**

அவர்களை மேலும் பட்டங்கள் பல பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க வென பாராட்டி வாழ்த்துகிறோம்.

அரியாலை. (40839)(26-19-34) **அன்பு உள்ளங்கள்.**


## வீதி விபத்தில் ஆசிரியை காயம்!

தென்மராட்சி,ஒக்.6

சாவகச்சேரி-கச்சாய் வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்- சைக்கிள் விபத்தில் ஆசிரியை ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இரத்தின சிங்கம் தர்சினி (வயது 26) என்பவர் இந்த விபத்தில் தலையில் காய மடைந்து மயங்கிய நிலையில் சாவ கச்சேரி மருத்துவ மனையில் அனு மதிக்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டார். (ஒ-117)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்











**பொ. கிருபானந்தன்** (B.Sc. With Edu.) **கி. பிரதீபா** (B.A. Hons.) **த. முகுந்தன்** (B.Com. Hons.)

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் பொன்னுத்துரை கிருபானந்தன் , கிருபானந்தன் பிரதீபா தம்பதிகள், மற்றும் தர்மகுலசிங்கம் முகுந்தன் ஆகியோர் பட்டம் பெறுவதையிட்டு நாம் மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய்.

பொன்னுத்துரை குடும்பம், தர்மகுலசிங்கம் குடும்பம், சிவகுமார் குடும்பம் (ஜேர்மனி), Dr. சிவசம்பு குடும்பம், மற்றும் உற்றார் உறவினர்கள்.



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது சங்க அங்கத்தவர்களான

**திரு.கனகலிங்கம் தர்மசேகரம் (B.A.HONS)**

**செல்வி கந்தர் நகுலாம்பிகை (B.A.HONS)**

**துரைராசா யசிந்தன் (B.A.)**

ஆகியோர் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு, அவர்களை உளமார வாழ்த்தி நிற்கின்றோம்.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்க நிர்வாகிகளும், அங்கத்தவர்களும்.

(40837)(26-19-34)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

அறிவினை வளர்த்திடும் ஆசான்களை!
உயர்வினை வழங்கிடும் ஒளிச்சுடர்களை!
கற்கமி நிறுவனத்தின் வள அணியை!
நற்பணி புரிந்திடும் நல்முத்துக்களை!
ஒக்ரோபர் ஆறு ஆசிரிய தின நாளில்
தக்கோர் பணித்திறன் பாராட்டி
வளமுடன் நாடறிய ஒளிவீசி உயர்ந்து
நலமுடன் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

நிருவாகி, மாணவர்கள்,
**கற்கமி கல்வி நிறுவனம்**
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துகளுடன் அனுசரணை வழங்குவோர்:-

**நித்திய கல்யாணி நகை மாளிகை**
205/4 , கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/45444)(26-19-34)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்







**பொன்னுத்துரை தயாளன்** (B.F.A) **சபாரத்தினம் மயூரன்** (B.B.A) **இராசையா சுதாகரன்** (B.B.A)

இன்று (06.10.2005) வியாழக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவிலே பட்டம் பெறும் எமது கல்வி நிலைய ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எவரெஸ்ற் கல்வி நிலையம், இணுவில் மேற்கு. **இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

(40838)(26-19-34)


## மீனவர் சங்க அலுவலகம் திறப்பு

வலி.தென்மேற்கு,ஒக்.6

மானிப்பாய் கூழாவடி-புனித குசைப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மானிப்பாய்-யாழ்ப்பாணம் வீதியில் சங்கத்திற்கென அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்ட நிதியிலிருந்து சங்க அலுவலகத்திற்கு தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (ஒ-135)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு கந்தையா தருமகுலசிங்கம்**

யா/வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்கள் 2004ஆம் ஆண்டில் வலய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தேர்வின் அடிப்படையில் வடமராட்சி வலயத்தில் சிறந்த அதிபராக மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு, உலக ஆசிரியர் தினமான இன்று சிறந்த அதிபருக்கான விருதைப் பெறுவதையிட்டுப் பாடசாலைச் சமூகம் மகிழ்ச்சியடைவதோடு, அவரது சேவை மேலும் வளர நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(40830)(26-19-34) **பாடசாலைச் சமூகம்**
யா/ வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.


## மதுபானம் விற்றோருக்கு அபராதம் விதிப்பு

தென்மராட்சி,ஒக்.6

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த 9பேருக்கு 65 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் அண்மையில் மீசாலை, மந்துவில் கிழக்கு, மட்டுவில், சரசாலை, மந்துவில் வடக்கு ஆகிய இடங்களில் நடத்திய திடீர் சோதனையின் போது இவர்கள் சிக்கினர்.

இவர்களுக்கு எதிராக கடந்த மாதம் 28ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன் றில் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப் பட்டன. அப்போது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக் கப்பட்டது. (த-117)


**B.A. PART - I (யாழ்.பல்கலைக்கழகம்)**

**B.A. இறுதியாண்டு (பேராதனைப் பல்கலைக்கழகம்)**

இக்கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் 01-10-2005 ஆரம்பமாகிவிட்டன.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (40770)(26-19-34)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (06-10-2005) வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும்,







**திரு.M.ரஜீதரன்** B.A. (Hons) (அரசறிவியல் விஞ்ஞானம் சிறப்புக்கலை)

**திரு.R.குபேசன்** B.A. (Hons) (அரசறிவியல் விஞ்ஞானம் சிறப்புக்கலை)

**திரு.S.பத்மநாசன்** B.A. (Hons) (மெய்யியல் சிறப்புக்கலை)







**செல்வி.K.சத்தியரஜனி** B.A. (Hons) (புவியியல் சிறப்புக்கலை)

**செல்வி.N.வசந்தகலா** B.A. (Hons) (இந்துநாகரிகம் சிறப்புக்கலை)

**திரு.M.ஜீவாகரன்** B.A. (Hons) (அரசறிவியல் விஞ்ஞானம் சிறப்புக்கலை)





**செல்வி.K.இலக்குணதேவி** B.A. (Hons) (புவியியல் சிறப்புக்கலை)

**திரு.K.இரத்தினகுமார்** (M.Ed.)

இவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்களைப் பெற்றுச் சிறப்பெய்த கேதுவூர் விநாயகப் பெருமானின் அருள்வேண்டி ஆசீர்வதிக்கின்றோம்.

**- கிராம அபிவிருத்திச் சங்கம், வாதரவத்தை.**

(40842)(24-26-19-34)



## விசேட விலைக் கழிவு

நாடளாவிய ரீதியில் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும் வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கு இணங்க இரண்டு கிலோவிற்கு மேல் அனுப்பும் ஒவ்வொரு கிலோவிற்கான கட்டணம் ஐரோப்பிய **(பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், நோர்வே, டென்மார்க்)** நாடுகளுக்கும் **அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா** ஆகிய நாடு களுக்கும் குறைக்கப்பட்டுள்ளன.

**தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நீங்கள் அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடா, புகைப்படங்கள் ஆகியவற்றை எம் மூலமாக விரைவாக அனுப்பிவைக்கலாம்.**

**தொடர்புகளுக்கு:**

**RAINBOW TRAVELS & TOURS**

32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா கிறீம் கவுசுக்கு அருகில்) **Tel: 021-2223237.**

## வாழ்த்துகிறோம்



இன்று (06.10.2005) வியாழக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெறும எமது நண்பன்

**செ. அற்புதராஜ்**

அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ இறைவன் ஆசியை வேண்டுகிறோம்.

'உதயன்' பணிமனை,
யாழ்ப்பாணம். நண்பர்கள்.

---

## சைவப் புலவர் வ. கந்தசாமி ஐயா அவர்களைப் பாராட்டுகின்றோம்



யாழ். பல்கலைக்கழகம் அளிக்கும்
கௌரவ கலாநிதிப் பட்டத்தைப் பெறும்
சைவ பரிபாலன சபைத் தலைவர்

**உயர்திரு. வ. கந்தசாமி ஐயா**

அவர்களைப் பாராட்டி வளம்பெருக வாழ்த்துகின்றேன்.
வி. தயாபரன் (சைவ பரிபாலன சபை பொருளாளர்)
(தயா அச்சகம்) (40914) (22)

---

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்
பட்டமளிப்பு விழாவில்

**பரமலிங்கம் சிவகரன்**

(குமரகோட்டம்,கோண்டாவில்)

அவர்கள் சமூகவியல் சிறப்புப் பட்டதாரியாக B.A (Hons) பட்டம் பெறுவதையிட்டு அவரை மனமுவந்து வாழ்த்துவதுடன் அவர் மேன் மேலும் சிறப்புற்று இன்பமுடன் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ பரராஜசேகரனை இறைஞ்சுகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*
குலேந்திரன் - ஞானேஸ்வரி
பாலேந்திரன் தம்பதிகள் (பின்லாந்து)
ம.சிவகுமார் தம்பதிகள்
குமார் பந்தல் சேவை, இணுவில்.
சிறிகரன் தம்பதிகள்
சிறி லக்சுமி கூல்பார், இணுவில் சந்தி.
(40877) (22)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி சுகந்தினி வீரபத்திரன்**

யாழ். பல்கலைக்கழத்தில்
இன்று (06.10.2005) வியாழக்கிழமை
அரசறிவியல் சிறப்புக் கலைமாணி பட்டம்
பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற
இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
தர்மசீலன் - சுதர்சினி(வாணி)
குடும்பத்தினர்.
'வாணி பவனம்', ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (40923)

---

## ஆசிரியர் தின வாழ்த்து

பாடசாலையில் தன்நலம் கருதாத செயற்பாட்டின் காரணமாக மாணவர்களை மாகாணமட்ட, தேசிய மட்ட இடங்களை பெறவைப்பதற்கும்,சிறந்த பெறுபேறுகளைப் பெறவைப்பதற்கும் தம்மை அர்ப்பணித்து செயற்படுகின்ற அதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர், ஆசிரியர்களை இந்நாளில் வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
(40928)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுகின்ற எம் சக நண்பர்களான

| | |
|---|---|
| செல்வன் கிருபாகரமூர்த்தி அனந்தகோபன் | B. Sc. |
| செல்வன் பரராசசிங்கம் பிரதீசன் | B. A. |
| திருமதி சுகன்யா கலையரசன் | B. A. |
| செல்வி பத்மநாதன் சுஜிதா | B. Com. |
| திரு. சிவநாதன் றஜீவன் | B. Fa. |

ஆகியோர்கள் இது மட்டுமன்றி மேன்மேலும் உயர் பட்டங்கள் பெற்று வாழ உளமார வாழ்த்துகின்றேன்.

நண்பர்கள்சார்பில்
இ. நந்தகோபன்.
இணுவையூர். (40919) (54-17-18)

---

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா பார்வதிப்பிள்ளை (கனகம்மா)

காரைநகர் சின்னாலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சிங்கப்பூர் கடற்படை அதிகாரி (மில்ரி) கந்தையாவின் அன்பு மனைவியும் ஆறுமுகம்-பரிமளம் தம்பதியரின் மகளும் துரைராஜசிங்கம் (அமெரிக்கா), பகவத்சிங்கம் (அரச உணவுக் களஞ்சியப் பொறுப்பாளர்), பராசக்தி (ஆசிரியை, சன்மார்க்க ம. வி.), சிவசக்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.10.2005) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தகனத்திற்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*448, மானிப்பாய் வீதி,*
*ஒட்டுமடம்,*
*யாழ்ப்பாணம்.*
(40924) (54-17-18)

தகவல்:
க. பகவத்சிங்கம் (மகன் ),
த. பரராஜசிங்கம் (மருமகன் ).

---

## உலக ஆசிரியர் தினம் - 2005
## பாராட்டி வாழ்த்துகிறோம்



*2004 ஆம் ஆண்டில் வடமராட்சி வலயத்தில் சிறந்த ஆசிரியராக வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட யா/ குடத்தனை அ.மி. த.க. பாடசாலையில் கல்வி கற்பிப்பவரும் எங்கள் மாமா, சித்தப்பா ஆகியவருமான*

**திரு. முத்துக்கிருஷ்ணன் கதிர்காமலிங்கம்**

*அவர்களைப் பாராட்டி மேன்மேலும் பல சிறப்புக்களைப்பெற வாழ்த்துகிறோம்.*

மருமக்கள்:
திருமதி கல்பனா ஜெயச்சந்திரதாஸ், ப. பகீரதி, ப. சிந்துஜா, ப. தமிழினி, வி. விஜேந்திரா, வி. சஜேந்திரா,ஜெ.குந்தவி, ஜெ. வைஷ்ணவி, ஜெ. பிரேந்திரா.

பெறாமக்கள்:
செ.விநோதா, செ. கங்கா

'தமிழகம்'
அல்வாய் மேற்கு,
கொற்றாவத்தை.
(40916) (54-17-18)

தகவல்:
பரராஜசிங்கம்
குடும்பத்தினர்.

---

## மனம் மகிழ்ந்து பாராட்டுகின்றோம்

ஆசிரியர் தினமான இன்று (06.10.2005) வடமராட்சி கல்வி வலயத்தில் நல்ல அதிபராக தெரிவு செய்யப்பட்டு திருகோணமலை மாகாணக் கல்வி அமைச்சில் பாராட்டு பெறும்

வல்வெட்டி
இ. த. க. பாடசாலை அதிபர்

**திரு. க. தர்மகுலசிங்கம்**

அவர்களை
மனம் மகிழ்ந்து பாராட்டுகிறோம்.

வல்வெட்டி கல்விச் சமூகம்
வேம்படுகேணி
கல்விச் சமூகம்.
(சி-45458) (54-17-18)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்

திரு.T. தேவதயாளன், திரு.T. சமதர்மபாலன்
திரு. K. வர்ணகுலராசா,
திருமதி S. ஜெயலிங்கம்,
திருமதி E. ஞானாபொன்ராசா,
அருட்சகோதரி டொரின் சாந்தகுமாரி பிலிப் பையா ஆகிய ஆசிரியர்கள் 06.10.2005 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் (ஆங்கில)B. A. பட்டம் பெறுகிறார்கள். இவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகிறோம்.

2004 - 2005 கலைப் பிரிவு,
3 ஆம் வருட ஆங்கில ஆசிரிய
மாணவர்கள்.
(40922)

---

## தவறிவிட்டது

விநாயகமூர்த்தி நந்தகுமார் என்பவருடைய A008992224 என்னும் இலக்கத்தையுடைய சாரதி அனுமதிப்பத்திரம்,விசேட அடையாள அட்டை என்பன சாவகச்சேரிக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 07767015501 என்னும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி-45465)

---

## வான் விற்பனைக்கு

கூட் பொடி அடித்த எல்வ் - 250 நீளமுடைய வான் விற்பனைக்குண்டு.
தொடர்புகளிற்கு:
077 6678477
(சி-45466) (54-17-18)

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**சாந்தநாயகி பீதாம்பரம்**



ஆண்டாறாயிடினும்
ஆறவில்லை எம்துயரம்
மீண்டும் நீ வாராயோ!

பீதாம்பரம்
குடும்பத்தினர்.
(40926) (54-17-18)

---

## மரண அறிவித்தல்கள்

### அமரர் சுப்பிரமணியம் சாமுவேல்

மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சாமுவேல் அவர்கள் 04.10.2005 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும் ரூத் பரமேஸ்வரின் அன்புக் கணவரும் வாசுகி, டேவிட்ராஜ் (யாழ்ப்பாணக் கல்லூரி, ஆசிரியர்), வதனி (விடுதி மேற்பார்வையாளர், மட்டக்களப்பு), மரியா, சுலோசனா ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனதாசின் அன்பு மாமனாரும். நவரட்ணம் (காந்தி) தியாகராஜா, தங்கராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மாங்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முல்லை வீதி,*
*பிள்ளையார் கோயிலடி,*
*மாங்குளம்.*
(40929) (54-17-18)

தகவல்:
டேவிட் ராஜ்
(மகன்).

---

### அமரர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் (குட்டி)



நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தியாகலிங்கம் (குட்டி) 03.10.2005 திங்கட்கிழமையன்று கனடாவில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றர்களான சுப்பிரமணியம்-மாணிக்கம் தம்பதியினரின் பாசமிகு மகனும் வசந்தராணியின் (கனடா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை -அன்னலக்ஷ்மி தம்பதியினரின் மருமகனும் கணேசலிங்கம் (திருவரங்கம் உணவக உரிமையாளர், வெள்ளவத்தை), காலஞ்சென்ற சுந்தரலிங்கம், ராதாகிருஷ்ணன் (கீரிமலை), சுலோசனாதேவி (லண்டன்), விமலாதேவி (கீரிமலை), சற்குணலிங்கம் (குமார் உணவக உரிமையாளர், வவுனியா), லலிதாதேவி (அளவெட்டி), அருள்லிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கம்மா, விஜயசிங் (விஜயன், லண்டன்), காலஞ்சென்ற நாகராசா, சியாமளா, விக்னேஸ்வரன் (அளவெட்டி), தயாளினி (லண்டன்), மகாதேவராஜா, பரமேஸ்வரி, குமாரகுலசிங்கம் யோகேஸ்வரி (தொட்டிலடி), நகுலேஸ்வரி (பிரான்ஸ்), சிதம்பரநாதன் விஜயகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2005) வியாழக்கிழமை கனடா, ரொறொண்டோ நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.
(40925) (54-17-18)

தகவல்:
சகோதரன் கணேசலிங்கம்
(தேவன்).

---

### அமரர் பெனடிற் சிந்தாத்துரை



யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த பெனடிற் சிந்தாத்துரை அவர்கள் நேற்று (05.10.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பெனடிற்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பர்நாந்து- திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிந்தாத்துரை லூர்த்தம்மாவின் பாசமிகு கணவரும் லஸ்ரிக்கா, டோறின்ரா, துசித்தா,கலிஸ்ரா, டென்சியா, சலேற்மரியா ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.10.2005) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் புனித யாகப்பர் ஆயலத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி நிறைவடைந்ததும் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 41, 6ஆம் குறுக்குத் தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
T.P:- No.0773144888,
0773223030
(40917) (54-17-18)

தகவல்:
குடும்பத்தினர்.

---

### அமரர் நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமகவும் கொண்ட நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (05.10.2005) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நாகலிங்கம் -செல்லம்மா தம்பதியரின் இளைய புதல்வனும் உஷாவின் அன்புக் கணவரும் கம்சன், அனுசன், ஆகியோரின் தந்தையாரும் தம்பிராசா (கனடா), இராசலிங்கம் (கனடா), நடராஜா (கனடா), இராசாத்தியம்மா (நீர்வேலி), செல்வராணி (கனடா), உமாதேவி(கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேதநாயகி, செல்வராணி, பத்மினிதேவி, சண்முகநாதன், விஜி ஆகியோரின் மைத்துனரும் சசிகலா, கிருஸ்ணகுமார் ஆகியோரின் மாமனாரும் பிரசன்னா, ஜனகன், நிமல், ஜெனனி, தர்சன், சர்மிளா, சனா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
(40918) (54-17-18)

தகவல்:
சகோதரி
ச. இராசாத்தி அம்மா.

# ஹெல உறுமய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு நேற்று உதயனுக்குத் தெரிவித்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த பிரமுகரும், வர்த்தக,வாணிபத்துறை அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கு எடுத்திருக்கும் தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் கூறியதாவது:-

எம்மிடம் இருக்கும் புள்ளிவிவரங்களின் படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு ஒரு லட்சத்து 86 ஆயிரம் வாக்குகளும், இ.தொ.காவிற்கு மூன்று லட்சம் வாக்குகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆறு லட்சம் வாக்குகளும் இருக்கின்றன. இவர்களின் ஆதரவின்றி கடந்த முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வென்றது. அதுபோல் இம்முறை ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகளின் ஆத ரவுடன் எமது கட்சி வெற்றியீட்டும்.

இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவின்றி பிரதமர் மஹிந்த ஜனாதிபதியாவது நிச்சயம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதை நியாயப்படுத்துவதற்காக இப்போது பல காரணங்களை இந்தக் கட்சிகள் கூறுகின்றன. பிரதமர் மஹிந்த ஜே.வி.பியுடன் இணைவதை விரும்பாத அதே இ.தொ.காதான் ஜாதிக ஹெல உறுமயவுடன் அரசியல் ஒப்பந்தமொன்றை இரகசியமாகச் செய்துகொண்டது. அந்த ஒப்பந்தம் மற்றும் பல தகவல்களை நாம் விரைவில் அம்பலப்படுத்துவோம்.-என்றார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

(எ-க)

## யாழ். பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும். 2ஆயிரத்து 375 பேர் பட்டம் பெறுவர்.

இவர்களில் 6 பேர் கௌரவ கலாநிதிப் பட்டமும், 3 பேர் கலாநிதிப் பட்டமும் பெறுகின்றனர்.

இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில், இன்றைய தினம் பட்டம்பெறவுள்ளோர் மங்கள வாத்தியங்கள், பட்டு, குடை, ஆலவட்டம் என்பவற்றுடன் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

ஐந்து அமர்வுகளும் முறையே காலை 9 மணி, முற்பகல் 10.30 மணி, முற்பகல் 11.30 மணி, பிற்பகல் 1.30 மணி, பிற்பகல் 2.30 மணி ஆகிய நேரங்களில் நடைபெறும்.

இதே நேர ஒழுங்கில் நாளையும் பட்டமளிப்பு நடைபெறும்.

இன்றையதினம் 3 பேர் கௌரவ கலாநிதிப் பட்டமும் 2 பேர் கலாநிதிப் பட்டமும் பெறுகின்றனர்.

இன்றையதினம் கௌரவ கலாநிதிப் பட்டம் பெறுவோர் விவரம் 5ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

(எ-12)

# ஜனாதிபதி கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகிவிட இ.தொ.கா. அமைச்சர்கள் தயார் என்றும்-

இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இ.தொ.காவின் முடிவை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டை இ.தொ.கா. நேற்று கொழும்பு டிரான்ஸ் ஏஷியா ஹோட்டலில் நடத்தியது. அதில் கலந்துகொண்ட இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அங்கு மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது பற்றி அனைவருடனும் நீண்ட கலந்துரையாடல்களையும், கருத்துப் பரிமாற்றங்களையும் நடத்திய பின் ரணிலை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்தோம்.

இந்நாட்டின் தேசிய பிரச்சினையைத் தீர்த்து நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுதல், நாட்டில் அபிவிருத்தியை மேம்படுத்தல் மற்றும் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் போன்ற விவகாரங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமக்குச் சார்பான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாவதற்கு முன் ரணிலுக்கு ஆதரவளிக்க முடிவெடுத்துள்ளோம். அதற்குக் காரணம், எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய ஒரு சிறந்த தலைவன் ரணில் என்பதை நாம் உணர்ந்ததனாலாகும்.

'இ.தொ.காவினதும், முஸ்லிம் காங்கிரஸினதும் ஆதரவு இல்லாமல் எம்மால் வெல்ல முடியும். இவ்விரு கட்சிகளின் ஆதரவும் எமக்குத் தேவையில்லை'.- என்ற தொனியில் பிரதமர் பக்கத்தில் கூறப்பட்டிருந்தாலும் அது அவர்களின் நிலைப்பாடு. அதைப் பற்றி நாம் ஒன்றும் கூறவிரும்பவில்லை.

அதேவேளை, ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுடனான பிரதமரின் கூட்டையும் நான் விமர்சிக்க விரும்பவில்லை.

எமக்கு எந்த வேட்பாளர் சரியானவர் எனப் படுகிறதோ, அந்த வேட்பாளரை ஆதரிப்பது எமது கடமை. அந்தவகையில், ரணிலே சிறந்த வேட்பாளர் என்பது எமது கருத்து.

இனிவரும் நாள்களில் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து பிரசாரப் பணிகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம். எமது பிரசார நடவடிக்கைகள் ஐ.தே.கவுடன் இணைந்தும் தனியாகவும் மேற்கொள்ளப்படும்.

ரணிலின் வெற்றிக்கு நாம் முக்கிய பங்காளிகளாக இருப்போம்.- என்றார்.

இச்செய்தியாளர் மாநாட்டிற்கு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவும் சமூகம் கொடுத்திருந்தார்.

(எ-க-9-7)

# தமிழரின் வெற்றியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டிலேயே ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுப்பதற்கு முன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஐ.தே.கவின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பலதடவைகள் நாம் பேச்சு நடத்தினோம்.

பிரதமருடன் நடத்திய பேச்சுகள் வெற்றியளிக்கவில்லை. அவர் தாம் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெலஉறுமய ஆகிய கட்சிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் செயற்படுகின்றார். அந்த ஒப்பந்தங்கள் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் அமையவில்லை.

இதேவேளை, ரணிலுடன் பேச்சு நடத்தியபோது எமது கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் மிக நுணுக்கமாக அவதானித்து செவிமடுத்து அக்கோரிக்கையைத் தாம் நிறைவேற்றுவார் என அவர் எழுத்துமூலம் உறுதியளித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க எடுத்ததற்கெல்லாம் வாக்குறுதியளிப்பவர் அல்லர். அவரால் நிறைவேற்றக்கூடிய கோரிக்கைகளை மாத்திரமே ஏற்றுக்கொள்வார். அவருடன் சேர்ந்து அரசியல் செய்த அனுபவத்தை வைத்து நாம் இதை நம்புகிறோம்.

வெற்றிபெறுகின்ற கட்சியோடுசேர்ந்து ஆட்சியமைக்கும் கொள்கையைக் கொண்டதல்ல ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி. எந்தக் கட்சி முஸ்லிம்களின் பிரச்சினை களைத் தீர்ப்பதில் அக்கறைகொண்டுள்ளதோ அக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அதை வெற்றி பெறச் செய்வதே எமது நோக்கு. மறைந்த தலைவர் எம்.எச். எம்.அஷ்ரப் கூட இதே கொள்கையையே கொண்டிருந்தார். நாம் எப்போதும் சந்தர்ப்பவாத அரசியல் நடத்துபவர்கள் அல்லர்.

முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு தலைவர் என்றால் அவர் ரணில் மாத்திரமே.

அதேவேளை, முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குக் கிடைக்கும் தீர்வு தமிழர்களின் பிரச்சினைகளுக்குக் கிடைக்கும் தீர்வில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது என்பதிலும் நாம் மிகவும் கவனமாக உள்ளோம்.

இந்த விடயத்தை கருத்தில்கொண்டே ஐ.தே.கவுடன் எமது ஒப்பந்தம் அமைந்துள்ளது. தமிழர்களின் நியாயமான போராட்டத்திற்குக் கிடைக்கும் வெற்றியை எமது பிரச்சினைக்குக் கிடைக்கும் தீர்வு எந்தவகையிலும் பாதிக்காது என்பது உறுதி - இவ்வாறு கூறினார் ஹக்கீம்.

(எ-க)

## ரணில் மஹிந்த நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் தனித்தனியே சந்தித்துப் பேசவுள்ளனர்.

இரு பிரதான வேட்பாளர்களின் வருகையை முன்னிட்டு நாளைய தினம் கண்டி நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு விசேட பணிப்புரை வழங்கப்பட்டிருக்கின்றது.

(எ-க)

## கிளிநொச்சியில்.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடித்தளமாகக் கொண்டுள்ளது.

எமது குழந்தைகள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதே தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பு. எங்கள் தலைமுறையின் துன்பங்கள் குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடாது என்றகனவே அவருடைய மனதில் நிறைந்திருக்கின்றது.

அந்தக் கனவை நிலைநாட்டுவதற்காகவே தேசியத் தலைவர் கல்வி, விளையாட்டு என்பவற்றிற்கான தனியான கட்டமைப்புகளை ஏற்படுத்தியுள்ளார். பூமிப்பந்தில் எமது தேசமும் சாதனைகளால் தம்மை அடையாளப் படுத்தவேண்டும் என்பதற்காகவே குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவுநாளில் இந்தச் சாதனையாளர்களைக் கௌரவிக்கின்றோம்.

இத்தகைய சாதனையாளர்களின் அர்ப்பணிப்பு எங்கள் எதிர்கால சந்ததியினரின் எழுச்சிமிகு அடையாளத்திற்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக அமையவேண்டும் - என்றார்.

(எ)

## தமிழ்பேசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறமாகவும், சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் கட்சிகள் மற்றொரு புறமாகவும் கன்னை பிரிந்துள்ள தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையில் இந்தத் தேர்தலில் கடுமையான போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ-க)

## ரணில் - மஹிந்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரசார காலத்தில் உயிராபத்து ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக தேசிய புலனாய்வுப் பணியகம் முக்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதையடுத்து பாதுகாப்பு அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறது.

இதன்படி, மேற்படி இரண்டு வேட்பாளர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு இரட்டிப்பாக்கப்படவுள்ளது. அத்துடன் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பும் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

(எ-க)

# பன்னிரு வேங்கைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்புலிகளின் சுமார் 200 துணைப்படை வீரர்கள் காலை 9.30 மணியளவில் நினைவு தினப் பந்தல் முன் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

அதன்பின்பு துணைப்படைத் தலைவர் தா.பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஈகச்சுடரினை மாவீரர்களான மேஜர் தவச்செல்வி, லெப். நிவேத்திரா ஆகியோரது தந்தையான எஸ்.தவராசா ஏற்றினார்.

பன்னிரு வேங்கைகளுக்கான மலர் மாலையை லெப். செல்வம், லெப்.சீசர் ஆகிய மாவீரரின் சகோதரன் த.அகிலதாஸ் அணிவித்தார். தமிழீழத் தேசியக் கொடியினை பழனி, றஜீவபதுமன் ஆகியோரது தந்தை சந்தியாப்பிள்ளை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலி நிகழ்வில் மாவீரர் போராளிகளின் பெற்றோர், உறவினர்கள் பங்குகொண்டனர். துணைப்படை வீரர்கள் அணிவகுப்புடன் மலர் அஞ்சலி செலுத்தினர்.

நினைவுரையினை வல்வை. சிதம்பராக் கல்லூ மாணவன் பா.செந்தமிழ்ச் செல்வன், வடமராட்சி வடக்கு க.தொ.கூ.ச.ச. செயலர் க.சூரியகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். பருத்தித் துறைமுனை. க.தொ.கூ.ச.தலைவர் பி. குமார் தேசியக் கொடியினை இறக்கி நிகழ்வினை முடித்துவைத்தார்.

### எள்ளங்குளத்தில்

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திலும் 12 வீரவேங்கைகளின் நினைவு தின நிகழ்வுகள் நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்றன.

பொதுச்சுடரை கப்டன் இதயனின் தந்தை எஸ்.சின்னத்துரை ஏற்றினார். ஈகச்சுடரை மாவீரர்களான லெப்.வீமா, லெப்.இளம்பிறை ஆகியோரது சகோதரியான எஸ்.சரிதா ஏற்றினார். பன்னிருவரின் பொதுத்திருவுருவப் படத்திற்கு மாவீரர்களான லெப் குயிலி, லெப். கண்ணன் ஆகியோரது சகோதரி எஸ்.பவளராணி மலர்மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

### விசுவமடுவில்

விசுவமடு பிரதேச வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் விசுவமடு மாவீரர் மண்டபத்திலும் பன்னிரு வேங்கைகளின் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

பொதுச்சுடரினை விசுவமடு கிராம சேவையாளர் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை பிரதேசஅரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றினார். ஈகச்சுடரினை மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் சீதாராமும் கரிகாலினியும் ஏற்றிவைத்தனர். மலர்மாலையினை கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டுத் தலைவி திருமதி காசிநாதன் அணிவித்தார்.

தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன.

### கண்டாவளையில்

கண்டாவளை மகாவித்தியாலயத்தில் பன்னிரு வேங்கைகளின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது. மாணவன் துரைசிங்கம் ஸ்ரீஸ்கரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரினை கல்விக்கழக மாவட்ட பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருள் ஏற்றினார். பாடசாலைக் கொடியை அதிபர் ஸ்ரீதரன் ஏற்றினார். பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரினை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ச.எழிலன்பன் ஏற்றினார்.

பாடசாலைக்கான புதிய நுழைவாயிலும் திறந்துவைக்கப்பட்டது. அதற்கான மங்கள விளக்கினை கிராம சேவையாளர் சி.பரமதாஸ், கனகராசா, கண்டாவளை ம.வி. அபிவிருத்திச் சங்க செயலாளர் ம.ஸ்ரீகணநாதன் ஆகியோர் ஏற்றினர்.

மாவீரர்களின் நினைவுத் தூபிக்கான சுடரினை வீ.யசோதா, க.வித்தியானந்தன் ஆகியோர் ஏற்றினர்.

மலர்மாலைகளைக் கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி வீ.இராஜகுலசிங்கம் அணிவித்தார். தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது. குமரப்பா, புலேந்திரன் ஆகியோரது திருவுருவப்படங்களுக்கு மலர்மாலையை போராளி சிவா அணிவித்தார்.

### மட்டக்களப்பில்

பன்னிரு வேங்கைகளின் நினைவு தினத்தை முன்னிட்டு மட்டு., வாகரையில் பொதுமக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

முன்னதாக பொதுச்சுடரினை மாவீரர் இசைமொழியின் தாயார் சுந்தரம்பிள்ளை ஏற்றினார். தேசியக் கொடியை திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன் ஏற்றினார். தற்காப்புப் பயிற்சிகளை கில்மன் மாஸ்ரர் ஆரம்பித்து வைத்தார்.

கதிரவெளி பிரதேச கிராமசேவையாளர் தலைமையில் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் சிறப்புரைகளை தீபன் மற்றும் வேல்மாறன் ஆகியோர் நிகழ்த்தினர்.

(9-70-173-352-402)


# மரண அறிவித்தல்

## பரமேஸ்வரி குமாரசாமி

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி குமாரசாமி நேற்று (05.10.2005) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து குமாரசாமியின் (ஓவசியர்) அன்பு மனைவியும் கு.நடேசன் (ஆஸ்திரேலியா), கு.சரவணபவன் (ஆஸ்திரேலியா), கு.சிறீஸ்காந்தன் (ஆஸ்திரேலியா), ந.நளாயினி, கு.வைகுந்தன் (இத்தாலி), கு.இராகுலன் (ஜேர்மனி), கு.கனேந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் சித்திராதேவி, ச.இராகினி, சி.உத்தா, வண. ஜி.நடராஜா (மேற்பார்வையாளர், கனிஷ்ட பிரிவு, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), வை.நந்தினி, இ.ஜெனோமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரசாத், அஜந்தா, அனித்தா, ஜெனன், ஜெனித்தா, நிருஷா, வினுஷா, பென்ஜமின், ஏன்ஜல் (காலஞ்சென்ற), நோவா, மோஸஸ், விருஷா, கார்த்திகா, சகிஷ்னன், ரோகான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நுணாவிலில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (06.10.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(40930)(33-17-18-12)

தகவல்:
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.